வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 17.05.2023 புதன்கிழமை | இதழ் : 159 | பக்கங்கள் : 16

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

### கோட்டாபய கொலை முயற்சி வழக்கு:

## அரசியல் கைதியான ஆரூரன் மேல் நீதிமன்றால் விடுதலை!

கொழும்பு, மே 17

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொலை முயற்சி வழக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதியான யாழ்ப்பாணம் - வடமராட்சியை சேர்ந்த சிவலிங்கம் ஆரூரன் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

2008ஆம் ஆண்டு பயங்கரவாத தடை சட்டத்தில் கைது செய்யப்பட்ட பொறியியலாளரான சிவலிங்கம் ஆருரனை ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசாவின் வாதத்தை யடுத்து கொழும்பு மேல் நீதிமன்ற



15

## வடக்கு உட்பட 3 மாகாண ஆளுநர்கள் ஜனாதிபதி முன் இன்று பதவியேற்பர்!

கொழும்பு, மே 17

மூன்று மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் இன்று புதன்கிழமை ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்கவுள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநராக திருமதி பி. எம். எஸ். சார்ள்ஸ், கிழக்கு மாகாண ஆளுநராக செந்தில் தொண்டமான் மற்றும் வட மேல் மாகாண ஆளுநராக சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான



15

# இலங்கை போர் குற்றவாளிகளை பிரிட்டன் தடை செய்ய வேண்டும்!

### தமிழருக்கான பிரிட்டனின் சகல கட்சிகளின் எம். பிக்கள்



**லண்டன், மே 17**

**இலங்கையின் போர் குற்றவாளிகளுக்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதிக்க வேண்டும் என தமிழர்களுக்கான பிரிட்டனின் அனைத்து கட்சி பாராளுமன்ற குழுவின் தலைவரும் எலியட் கோல்பேர்ன் எம். பி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

முள்ளிவாய்க்கால் தமிழின படுகொலையின் 14ஆவது ஆண்டை நினைவேந்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஏனைய சர்வதேச நாடுகளை பின்பற்றி பிரிட்டன் இலங்கையின் போர் குற்றவாளிகளுக்கு எதிராக மக்னிட்ஸ்கி பாணியிலான தடைகளை விதிக்கவேண்டும்.

போர் குற்றங்களுக்கு மன்னிப்பு இல்லை. நீதி வழங்கப்படும், தமிழர்கள் செழிக்ககூடிய எதிர்காலத்துக்காக நாம் உழைக்க வேண்டும்- என்றும் அவர் கூறினார்.

இதேவேளை

15

## இலங்கையில் சிறுபான்மையினர் 2022இல் துன்புறுத்தப்பட்டார்கள்!

### அமெரிக்கா அறிக்கை

வோஷிங்டன், மே 17

இலங்கையில் மத சிறுபான்மையினர் 2022ஆம் ஆணடில் துன்புறுத்தப்பட்டார்கள் என்று மத சுதந்திரம் குறித்த அமெரிக்காவின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் ஏனைய அதிகாரிகளுடனான சந்திப்பின்போது, மோதலுக்கு பிந்தைய நல்லிணக்க செயல்பாட்டின் ஒரு பகுதியாக இன, மத சிறுபான்மை இனத்தவர்களை மதித்து அவர்களை அரவணைப்பதன் அவசியத்தை அமெரிக்க தூதரக அதிகாரிகள் வலி

15

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனைவரும் அணி திரள்வோம்!

### தமிழரசு கட்சி அழைப்பு

யாழ்ப்பாணம், மே 17

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் அனைவரும் அணிதிரள வேண்டும் என்று இலங்கை தமிழரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராசா அழைப்பு விடுத்துள்ளார்.

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

இலங்கைக்கு 1948ல் சுதந்திரம் கிடைத்தது. அந்த சுதந்திரம் தமிழர் தேசத்துக்கு, தமிழர் தேச மக்களுக்குக் கிடைக்கவில்லை. ஐரோப்பியரிடம் போரில் இழந்த சுதந்திரம்

15

## வாகனங்களில் வந்தவர்கள் மாணவிகளை கடத்த முயற்சி!

### ஒட்டுசுட்டானில் நேற்று சம்பவம்

முல்லைத்தீவு, மே 17

முல்லைத்தீவில் பாடசாலை சென்று திரும்பிய மாணவியர் இருவரை இரு வாகனங்களில் வந்த குழு ஒன்று கடத்த முற்பட்டதாக ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் - சின்னசாளம்பன் கிராமத்தில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

பாடசாலை

15

## சிறுமியை கடத்த முயன்றாரென்று மனநோயாளிமீது கொடூர தாக்குதல்!

### நாவாந்துறையில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், மே 17

நாவாந்துறையில் சிறுமியை அவதானித்தபடி இருந்த நபரை கடத்தல்காரன் என்று நம்பிய சிலர் அவரை கடுமையாக தாக்கியுள்ளனர். இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கானவர் மனநோயாளி என்று கூறப்படுகின்றது.

நாவாந்துறையில் ஒஸ்மானியா கல்லூரிக்கு அண்மையாக நேற்று மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து மேலும் அறிய வருவதாவது,

நாவாந்துறையில் நேற்று சிறுமியொருவரை நபர்

15

## பண்ணை அம்மன் சிலை வழக்கு தள்ளுபடியானது!

யாழ்ப்பாணம், மே 17

யாழ்ப்பாணம் - பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் வைக்கப்பட்ட நாகபூசணி அம்மன் சிலையை அகற்றுமாறு கோரி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, இந்த வழக்கை தொடர பொலிஸாருக்கு அதிகாரம் இல்லை என்று நீதிமன்றம் தெரிவித்ததுடன் வழக்கையும் தள்ளுபடி செய்தது.

தமிழ் புதுவருடப் பிறப்பு தினமான கடந்த ஏப்ரல் 14ஆம் திகதி பண்ணை சுற்றுவட்டத்தில் அம்மன் சிலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. இந்த சிலையை யார் வைத்தார்கள் என்று தெரியாத நிலையில், அந்த சிலையை அகற்ற பொலிஸார் நீதிமன்றம் ஊடாக அறிவித்தல் ஒன்றை ஒட்டினர்.

எனினும், இந்த சிலையை அகற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்து

15

## நினைவேந்தல் செய்தவர் கைது

மட்டக்களப்பு, மே 17

தமிழின இனப் படுகொலையை நினைவு கூரும் முகமாக மட்டக்களப்பில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிய ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுணதீவு - நரிப்புல் தோட்டம் கிராமத்தில் அகம் மனிதாபிமான வள

15

## முள்ளிவாய்க்கால் படுகொலையாளிகளை குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும்

### சிவாஜிலிங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 17

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையாளிகளைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தவேண்டும் என தமிழ் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை வாரத்தை

15



உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

உள்ளூராட்சி தேர்தலை அநேகமாக எல்லோருமே மறந்தே விட்டார்கள். மக்களின் ஜனநாயக உரிமை பற்றி கதைத்தவர்கள் இப்போது அதனை மறந்தே விட்டனர்.

இப்போது அரசியல் கட்சிகளின் கவனம் ஜனாதிபதித் தேர்தலில் திரும்பியிருக்கின்றது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு ஜனாதிபதி, தான் விரும்பினால் ஒரு வருடம் முன்னதாக தேர்தலை நடத்தலாம் என்ற அரசியலமைப்பு சட்டம் ரணிலுக்குப் பொருந்தாது என்றும் அவர் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியின் பதவிக்காலம் முழுவதும் பதவி வகிக்கவே பாராளுமன்றத்தால் தெரிவுசெய்யப்பட்டவர் எனவும் வாதிடப்படுகின்றது.

அதனால் அது தொடர்பாக- அதாவது பாராளுமன்றத்தால் தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதியும் தான் விரும்பினால் தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒரு வருடம் முன்னதாகவே தேர்தலை நடத்தலாம் என்றவாறாக அரசியலமைப்பு சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான ஆயத்தங்களை ஜனாதிபதி ரணில் தொடங்கிவிட்டாரென அவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அர்த்தம் நாம் விளங்கிக் கொள்ளக்கூடியதே. அதாவது எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு பின்னர் எந்த நேரத்திலும் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கு அவர் தயாராகிவிட்டார் என்பதே.

முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தல் ஒன்று நடத்தப்படுவதற்கு ஏதுவாக அரசியலமைப்பு சட்டத் திருத்தம் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்படுமானால் அதனை யாரும் எதிர்க்கமாட்டார்கள் என்று நம்பலாம். அவ்வாறு இல்லாமல் அதனை யாராவது எதிர்த்தால் அது, மக்களின் விருப்பத்துக்கு ஏற்ப ஆட்சி மாற்றம் ஒன்றையே அவர்கள் விரும்பவில்லை என்றாகிவிடும்.

அவ்வாறு திருத்தம் கொண்டுவரப்படும் என்பது அநேகமாக உறுதியாகி விட்டதாலேயே இப்போது அரசியல் கட்சிகளின் கவனம் முழுவதும் ஜனாதிபதித் தேர்தல் மீது திரும்பியிருக்கின்றது.

அண்மையில், ஐக்கிய மக்கள் சக்தியின் செயல்குழு கூடி ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சியின் சார்பில் ஒரு வேட்பாளரை நிறுத்துவது எனவும் அந்த வேட்பாளர் சஜித் பிரேமதாஸதான் என்றும் தீர்மானம் நிறைவேற்றியதை வாசகர்கள் நினைவில் வைத்திருப்பார்கள்.

அப்படியொரு தீர்மானம் எதற்காகக் கொண்டுவரப்பட்டது என்று ஆராய முற்பட்டால் பல தகவல்கள் வெளிக்கிளம்புகின்றன.

இன்றைய நிலையில் நாட்டை வழிநடத்தக்கூடிய தலைவர் என்று சாதாரண மக்களும் நம்புகின்ற அளவுக்கு ரணில் விஸ்வரூபம் எடுத்து நிற்கிறார் என்பது இரகசியமானதல்ல. இந்நிலையில், அவரை எதிர்த்து போட்டியிடக்கூடிய நிலையில் தான் இல்லை என்பதை சஜித் அறியாதவரல்ல. அவர்களின் செயல்குழு கூட்டத்திலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் சக்திவாய்ந்த பல பாராளுமன்ற உறுப்பினர்களை காணமுடியவில்லை. அவர்களில் பலர் ரணில் பக்கம் தாவுவதற்கு தயாராக இருந்தாலும் தேர்தல் அறிவிக்கப்படும் வேளையில் - இன்றைய நிலையில், அதாவது ரணில் மீதான மக்களின் மனநிலையில் மாற்றம் ஏற்படலாமோ என்ற சந்தேகம் இருப்பதாலேயே-

தேர்தல் அறிவிக்கப்படும் வேளையிலும் ரணில்மீதான மக்களின் அபிப்பிராயம் இப்போது இருப்பதுபோன்ற நிலையில் இருந்தால், தேர்தல் வேளையில் கட்சி மாறாலாம் என்று அவர்கள் எதிர்பார்ப்புடன் காத்திருப்பதாகவே கூறப்படுகின்றது.

அவ்வாறான நிலைமை ஒன்று ஏற்படும்போது ரணிலுக்கு எதிராகக் களம் இறங்குவதை சஜித் விரும்பவில்லை என்றும் அவரின் மனநிலையை அறிந்ததாலேயே கட்சியிலுள்ள அவரது விசுவாசிகள் அப்படியானதொரு தீர்மானத்தை அன்றைய தினம் நிறைவேற்றினரெனவும் ஐக்கிய மக்கள் சக்திக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை இலக்குவைத்து மிகப்பெரிய கூட்டணி ஒன்றை அமைக்கவேண்டும் என்றும் விரும்பும் அவர்கள் அதற்காக எதிரணியிலுள்ள கட்சிகளுடன் பேச்சுகளை நடத்துவதற்கும் அன்றைய கூட்டத்தில் சஜித்துக்கு அனுமதியை வழங்கியிருந்தனர்.

ஏற்கனவே, அவரோடு இணையத்தயாராக இருக்கும் டலஸ்- பீரிஸ் அணியினருடன் மேலும் பல சிறிய சிறிய குழுக்களை அணைத்துக்கொள்ளவும், அதேவேளை சிறீ லங்கா சுதந்திர கட்சியையும் தமது அணியில் இணைக்கவும் சஜித் தமது முயற்சியை தொடங்கி விட்டதாகவும் அவர்களுக்கு நெருக்கமான அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மீண்டும் ஜனாதிபதிக்கான களத்தில் இறங்கவேண்டும் என்ற ஆசையில் இருக்கும் மைத்திரி அதற்கு சம்மதிப்பாரா என்பது தெரியவில்லை. ஆனால், இது குறித்து சொன்ன, தெற்கின் மூத்த ஊடகவியலாளர் ஒருவர், இன்றைய நிலையில் எதிரணியில் என்னவும் நடக்கலாம், அதிகம் ஏன் பாராளுமன்றத்தில் ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்காக நடந்த தேர்தலில் கடைசிநேரத்தில் சஜித் பின்வாங்கி டலஸ் அழகப்பெருமவை ஆதரித்ததுபோல நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலிலும் திடீர் திருப்பங்கள் நிகழ்ந்தாலும் ஆச்சரியம் இல்லை என்றார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் சிங்கள மக்களின் வாக்குகளால் மாத்திரமே வெற்றிபெற்றவர் கோட்டாபய. அந்த அறுபத்தி ஒன்பது இலட்சம் வாக்குகளையும் இலக்குவைத்து மற்றுமொரு தரப்பும் காய்நகர்த்தி வருகின்றதாம்.

அது பற்றி நாளை பார்ப்போம்.

**- ஊர்க்குருவி**

# பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டம் மீது நீர்த்தாரை!



கொழும்பு, மே 17

பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம் செய்துள்ளனர்.

அரச மருத்துவ பீடங்களில் நிலவும் பிரச்னைகளுக்கு தீர்வு காணுமாறு கோரியும் புதிய தனியார் மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிக்கும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

நேற்று கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இருந்து சுகாதார அமைச்சு வரை முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை தடுக்க பெருமளவு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அப்பகுதியில் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த போராட்டம் காரணமாக தாமரைத் தடாக சந்தி அருகே கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. (ஐ)

## 25 ஆயிரம் தொன் உரம் இறக்குமதிக்கு அனுமதி!

கொழும்பு, மே 17

சிறுபோக செய்கைக்காக இரண்டு அரச உர நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினரிடம் காணப்படுகின்ற யூரியா உரத்தின் அளவு மற்றும் கமநல சேவைகள் நிலையங்களில் எஞ்சியுள்ள தொகையைக் கருத்தில் கொள்ளும்போது, 25,000 மெற்றிக் தொன் யூரியா உரம் இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, லங்கா உர நிறுவனம் மூலமாக 60 சதவீதமும், வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் மூலமாக 40 சதவீதமுமாக குறித்த உரத்தின் அளவை இறக்குமதி செய்வதற்காக விவசாய அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

## மனநோய்கான 10 வகை மருந்துகளுக்கு தட்டுப்பாடு!

கொழும்பு, மே 17

மனநோய்களுக்கான பத்துக்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்துகள் வைத்தியசாலைகளில் இல்லை என அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் மருத் துவர் ஜயந்த பண்டார தெரிவித்துள்ளார் .

இது ஒரு தீவிர சமூக ஆபத்து என்று அவர் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து மனநோய்க்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் மருந்து தட்டுப்பாடு காரணமாக சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்கு வராமல் இருப்பது கடுமையான சமூக அவலமாக மாறியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உடல் நோய்கள் மட்டுமின்றி மனநோய்களிலும் அரசு சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறான மருந் துகளுக்கு அரசாங்கம் பெரு மளவு பணம் செலவழிக்காததால் இநிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் இது அரசாங்கத்தால் தீர்க்கப்படக்கூடிய பிரச்னை- என்றும் கூறினார்.

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 17

2009 இறுதிப் போரில் தம் இன்னுயிர்களை இழந்த மக்களை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுபுதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியால் இலங்கையிலும் இங்கிலாந்திலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

"அழிக்கப்பட்ட மக்களை நினைவு கூருவோம், அழிவுகளில் இருந்து அரசியல் பாடம் கற்போம்!" என்ற கோஷத்தை முன்வைத்து, "மீண்டெழுந்து புதிய பாதையில் முன்செல்வோம்!" என்ற தொனிப் பொருளில் முன்னெடுக்கப்படவுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான முள்ளிவாய்க்கால் நினைவு நாள் நிகழ்வு யாழ்ப்பாணம் புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு மக்கள் பங்கேற்புடன் சுடரேற்றல் மற்றும் நினைவுரைகளுடன் நடைபெறவுள்ளது.

இங்கிலாந்தில் புதிய மால்டன் நகரில் மனோர் பூங்கா மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை இங்கிலாந்து நேரம் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு புதிய ஜனநாயக மாக்சிச கட்சியினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

## தேசிய பொலிஸ் குழுவுக்கு உறுப்பினர்கள் நியமனம்!

கொழும்பு, மே 17

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவுக்கான உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி லலித் ஏக்கநாயக்க தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## கணித பாட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 17

மறைந்த பிரபல பொருளியல் ஆசிரியர் அமரர் வேலாயுதம் கருணாகரன் ஞாபகார்த்தமாக இந்த வருடம் க. பொ. த. சாதாரண தர பரீட்சை எழுதும் மாணவர்களின் நலன் கருதி இலவச கணிதபாட கருத்தரங்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஆ. ஆனந்தராஜா தலைமையில் நடைபெறும் இந்த கருத்தரங்கில் பிரபல கணித ஆசிரியர் எஸ். கே. தளையரட்ணம் வளவாளராகப் பங்கேற்பார்.

இதற்கான ஒழுங்கமைப்பை மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் தலைவர் சி. ஜனார்த்தன் (ஆசிரியர்) செயலாளர் ப. சாரங்கன் ஆகியோர் செய்துள்ளனர். (ஐ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 17

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் வாராந்த சுக்கிர வார சிறப்பு சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கத்தின் தலைமை உரையைத் தொடர்ந்து, சிறப்பு சொற்பொழிவை இளம் சைவப் புலவர் க. கயிலைநாதன் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் தலைப்பில் ஆற்றுவார்.

சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

ஈழநாடு
Eelanadu
17.05.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மீண்டும் அம்பலப்பட்டிருக்கும் பலவீனம்?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான பேச்சு நிறைவடைந்திருக்கின்றது. மீண்டும் மாகாண சபை விவகாரம் அத்துடன், புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசியிருக்கின்றனர். வழமைபோல் இறுதி முடிவின்றியே பேச்சு முடிவுற்றிருக்கின்றது. இந்தப் பேச்சும் வழமைபோல் இரா. சம்பந்தன் தலைமையில் இடம்பெற்றிருக்கின்றது. ஆனால், சம்பந்தன் அவரின் வயதின் காரணமாக இவ்வாறான பேச்சுகளில் பங்கு கொள்ளக்கூடிய நிலையில் இல்லை. ஏனெனில், சம்பந்தன் பேசுகின்ற விடயங்களை மற்றவர்களால் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றது. இந்த நிலையில், தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பாக நடைபெறும் பேச்சுகளை பரிகசிப்புக்குரிய விடயமாக மாற்றும் வகையிலான செயல்பாடுகளை இனியும் தொடர்வது முறையல்ல.

சம்பந்தனால் இயலாவிட்டால் அவர் பெருந்தன்மையுடன் இதுபோன்ற பேச்சுகளில் பங்குகொள்வதைத் தவிர்க்க வேண்டும். ஒருவேளை அவரின் பங்குபற்றல் குறியீட்டு ரீதியில் முக்கியத்துவம் என்றால், அவரின் சார்பில் பிறிதொருவரே விடயங்களை பேச வேண்டும். அதேபோன்று இதுபோன்ற பேச்சுகளில் பங்குகொள்ளும் போது -பங்குகொள்ளும் தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருக்க வேண்டும். ரணிலுக்கு முன்னால் விடயங்களை தங்களுக்குள் விவாதிபதாக இருக்கக்கூடாது. ஒரு பாதிக்கப்பட்ட தரப்பு தங்களுக்குள் தெளிவில்லாமல் சிங்கள ஆளும் வர்க்கத்துடன் பேச்சில் ஈடுபடக்கூடாது. இது தொடர்பில் 'ஈழநாடு' முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவுறுத்தியிருக்கின்றது. ஆனால், முன்னேற்றங்கள் ஏற்படவில்லை.

ஏற்கனவே, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்ட ஆவணம் ஒன்றே பேச்சில் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இதனை சி. வி. விக்னேஸ்வரனே முன்வைத்திருக்கின்றார். ஆனால், குறித்த ஆவணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழரசு கட்சியும் கையெழுத்திடவில்லை. குறித்த ஆவணம், மாகாண சபை தேர்தல் இடம்பெறும் வரையில் ஓர் ஆலோசனை சபையின் மூலம் மாகாண சபையை நிர்வகிக்கும் பரிந்துரையை முன்வைக்கின்றது. இதனை சி. வி. விக்னேஸ்வரன் ஆதரிக்கின்றார். ஆனால், மற்றவர்கள் ஆதரிக்கவில்லை.

உண்மையில் இந்த விடயங்களோடு விக்னேஸ்வரன் மல்லுக்கட்ட வேண்டியதில்லை. நெருக்கடி நிலைமையின் காரணமாக மாகாண சபை இயங்க முடியாதபோது ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகாரத்தின் அடிப்படையில் இடைக்கால ஆலோசனை சபையொன்றை நியமிக்க முடியும். ஆனால், அதனை ஏன் தமிழ் கட்சிகள் வலியுறுத்த வேண்டும் என்பதில் விக்னேஸ்வரனிடம் தெளிவில்லை. அவ்வாறானதொரு சபையை உருவாக்க வேண்டுமெனின் அதனை ஜனாதிபதியால் செய்ய முடியும். அதற்கு தமிழ் கட்சிகளின் ஆதரவோ அல்லது அங்கீகாரமோ தேவையில்லை.

ஆனால், இந்த விடயங்கள் மீண்டும் தமிழர் தரப்பின் பலவீனமான அரசியலையே அம்பலப்படுத்தியிருக்கின்றது. ஒருபுறம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினர் வெறுமனே தங்களுக்குள் மட்டுமே பேசிக் கொண்டிருக்கின்றனர் - மறுபுறம், பேச்சுகளை சாதகமாகக் கையாள வேண்டிய பொறுப்பிலிருக்கும் கூட்டமைப்பு மற்றும் தமிழரசு கட்சியினர் தங்களுக்குள் தயாரிப்புகள் இல்லாமல் பேச்சுகளை எதிர்கொள்கின்றனர். பேச்சுகளில் பங்குகொண்டேயாக வேண்டும் - அதனை மறுதலிப்பது முதிர்ச்சியான அரசியல் இல்லை - ஆனால், பேச்சுகளை முதிர்ச்சியுடன் கையாளவும் வேண்டும்.

# இராணுவத்தின் வசமுள்ள காணிகளை விரைவில் உரியவர்களிடம் வழங்குவோம்!

## *அமெரிக்க அதிகாரியிடம் நீதி அமைச்சர் உறுதி*

*கொழும்பு, மே 17*

*வடக்கு - கிழக்கில் இராணுவத்தினர் வசமிருந்த காணிகளில் 90வீதத்துக்கும் அதிகமான காணிகள் அப்பிரதேச மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. பல காரணங்களால் விடுவிக்காமல் உள்ள காணிகளை உரியவர்களுக்கு விரைவாக பெற்றுக்கொடுக்க அரசு விசேட கவனம் செலுத்தியுள்ளது என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.*

*அமெரிக்க அரச திணைக்களத்தின் தென் மற்றும் மத்திய ஆசிய பணியகத்தின் பிரதி உதவி செயலாளர் அப்ரீன் அக்டரிற்கும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு செவ்வாய்க்கிழமை நீதியமைச்சில் இடம் பெற்றது. இதன்போதே இவ்வாறு நீதியமைச்சர் தெரிவித்தார் என்று அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும், வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் பிரதி உதவி செயலாளர் அமைச்சரிடம் ஆலோசித்திருந்தார். அதற்கு அமைச்சர், இந்த சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ள விடயங்கள் அத்துடன், அவற்றை உள்வாங்குவதற்கான தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தாக்கம் செலுத்திய காரணிகள் ஆகியவற்றை இதன்போது தெளிவுப்படுத்தியுள்ளார்.*

*அத்துடன், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பிலும் இந்த சட்டமூலம் சட்டமாக்கப்பட்டதன் பின்னர் அரச மற்றும் தனியார் துறைகளில் ஏற்படும் மோசடிகளை கட்டுப்படுத்துவது தொடர்பிலும் அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.*

*அரசமைப்பின் 21ஆவது திருத்தச்சட்டத்தை அனுமதிக்கும்போதும் எதிர்க்கட்சியால் தடைகள் வந்தபோதும், அதனை அனுமதிக்கப்பட்ட பின்னர் நாட்டுக்கு தேவையான சட்ட மூலங்களை அனுமதிக்கும்போது அனைத்துத் தரப்பினருடன் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கிறோம்.*

*உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் அரசியல்வாதிகள் உட்பட சிவில் தரப்பின் பிரதிநிதிகள் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவித்துள்ளார்கள். பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் வேண்டாம் என்றால் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதா என்ற கருத்தாடல் நாட்டுக்குள் ஏற்பட்டிருக்கிறது.*

*பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் பிரேரணைகளை சமர்ப்பிக்க அனைவருக்கும் முடியுமான வகையில் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதற்போது பிரேரணைகள் கிடைக்கப் பெற்று வருகின்றன. மேலும், யுத்தம் நிறைவடைந்த நிலையில் பாதுகாப்பு படைகள் வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் பிரதி உதவி செயலாளர் அமைச்சரிடம் வினவியபோது, இராணுவத்தினர் வசமிருந்த காணிகளில் 90சதவீதத்துக்கும் அதிகமான காணிகள் அப்பிரதேச மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. பல்வேறு காரணங்களால் விடுவிக்காமல் உள்ள காணிகளை உரியவர்களுக்கு விரைவாக பெற்றுக்கொடுக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.*

*காணி பிரச்னை என்பது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல, காணி தொடர்பில் சரியான மதிப்பீட்டை மேற்கொள்ள 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டில் வனப்பகுதி எத்தனை சதவீதமாக காணப்பட்டது என்பதை ஆராய்வதற்கு காணி அமைச்சு மற்றும் நில அளவை திணைக்களம் ஒன்றிணைந்து காணி அளவை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.*

*தென்னாபிரிக்க அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் உண்மையை கண்டறிவதற்கான ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளதுடன், இதனூடாக நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்படும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.*

*இலங்கையின் நீதி கட்டமைப்பின் அபிவிருத்திக்காக ஐக்கிய அமெரிக்க இராச்சியம் மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனம் வழங்கும் ஒத்துழைப்பை வரவேற்பதாக அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)*

# மேலதிக அரச அதிபர் குளவிகொட்டுக்கு இலக்கு

*யாழ்ப்பாணம், மே 17*

*யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் குளவிக்கொட்டுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.*

*யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ம. பிரதீபன்நேற்று வல்வெட்டித்துறை கெருடாவில் பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்கானார். அவர் உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார். (ஐ)*


# இரத்த தானம்

*முல்லைத்தீவு, மே 17*

*2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இனப் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் நினைவாக இரத்த தான முகாம் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.*

*இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் 2 மணிவரை நடைபெறும் இந்த இரத்த தான முகாமில் சகலரையும் பங்கேற்று குருதி தானம் செய்யுமாறு புதுக்குடியிருப்பு இளைஞர்கள் மற்றும் நோயாளர் நலன்புரிச் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மே - 17 புதன்கிழமை
சோபகிருது வருடம் - வைகாசி 03
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சூன்ய




**மேடம்**

கணவன் - மனைவிக்குள் அனுசரித்து போவது நல்லது. வாகனத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் பாக்கிகளை வசூலிக்கப் பாருங்கள். மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். போராடி வெல்லும் நாள்.

**இடபம்**

ஆன்மிக பெரியோரின் ஆசி கிட்டும். அதிகார பதவியில் இருப்பவர்களின் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மிதுனம்**

சொன்ன சொல்லை காப்பாற்ற செயல்பட தொடங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் உங்களை தேடி வருவார்கள். உங்கள் கை ஓங்கும். நீங்கள் சாதிக்கும் நாள்.

**கடகம்**

குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். புனித தலங்களுக்குச் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் நெளிவு கற்றுக் கொள்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**சிம்மம்**

சந்திராஷ்டமம் இருப்பதால்சிக்கனமாக இருக்க வேண்டும் என்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். அடுத்தவர்களின் விவகாரங்களில் தலையிட வேண்டாம்.

**கன்னி**

தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பாராத நன்மை கிட்டும் நாள்.

**துலாம்**

கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். அமோகமான நாள்.

**விருட்சிகம்**

புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உத்தியோகத்தில் உங்கள் வேலையால் அதிகாரிகளுக்கு திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**

எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினருடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலை களை பகிர்ந்து கொள்வார்கள். தேவைகள் பூர்த்தியாகும்.

**மகரம்**

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**கும்பம்**

கணவன்-மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். மனசாட்சிப் படி செயல்படும் நாள்.

**மீனம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் நான்கு ஐந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். உத்தியோகத்தில் அதிருப்தி உண்டாகும்.

# கருணாநிதிக்கு நினைவு சின்னம் எதிர்த்து அ. தி. மு. க. வழக்கு தாக்கல்

சென்னை, மே 17

சென்னை மெரினாவில் கடலில் முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு பேனா நினைவு சின்னம் அமைக்க மத்திய சுற்றுச்சூழல் துறை அனுமதி வழங்கியதை எதிர்த்து அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் உச்ச நீதிமன்றத்தில் இடையீட்டு மனு தாக்கல் செய்துள்ளார்.

முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு, சென்னை மெரினாவில் கடலில் 81 கோடி (இந்திய) ரூபாய் செலவில் பேனா நினைவு சின்னம் அமைக்க தமிழக அரசு முடிவு செய்து, அதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்கு மத்திய சுற்றுச்சூழல் துறையும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கியுள்ளது.

மெரினா கடலில் பேனா நினைவு சின்னம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து ஏற்கெனவே மீனவர்கள் அமைப்பு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்நிலையில், நினைவு சின்னம் அமைக்க சுற்றுச்சூழல் துறை அனுமதி வழங்கியதை எதிர்த்து அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் சாரபில் உச்சநீதிமன்றில் இடையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பேனா நினைவு சின்னம் அமைப்பது கடலோர ஒழுங்குமுறை மண்டலத்துக்குள் வருவதால் கடல் வளமும் சுற்றுச்சூழலும் பாதிக்கப்படும். மீனவ கிராமங்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படும். கடல்வாழ் உயிரினங்கள் இறந்து போகும். இந்த திட்டமே மக்களின் வரிப் பணத்தை வீணடிப்பதாகும். எனவே, மெரினா கடலில் பேனா நினைவு சின்னம் அமைக்க வழங்கப்பட்ட அனுமதியை இரத்து செய்ய வேண்டும் - என்று கூறப்பட்டுள்ளது.

(ஐ)

# கள்ளச்சாராய மரணங்களுக்காக முதல்வர் பதவி விலகவேண்டும்

## எடப்பாடி பழனிச்சாமி வலியுறுத்து

திருச்சி, மே 17

கள்ளச்சாராய மரணங்களுக்கு பொறுப்பேற்று முதல்வர் இராஜிநாமா செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திருச்சியில் செய்தியாளர்களி டம் பேசிய அவர்,

“கள்ளச்சாராயம் மற்றும் போலி மதுபானம் குடித்த பலர் மரணம் அடைந்த செய்தி வேதனையும் அதிர்ச்சியும் அளித்துள்ளது. தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுள்ளது என்று தொடர்ந்து நான் கூறி வருகிறேன். பொம்மை முதல்வர், திறமையற்ற முதல்வர் தமிழகத்தை ஆளுகின்ற காரணத்தால் இப்படிப்பட்ட கொடுமைகளை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்து வருகிறேன்.

தமிழகத்தில் கள்ளச்சாராயம் பெருகி வருகிறது என்று பொலிஸ் மானியக் கோரிக்கையில் நான் பேசினேன். இதை அரசு, சரியான முறையில் கவனத்தில் எடுத்துக் கொண்டு இருந்தால் இந்த சம்பவத்தை தடுத்து நிறுத்தி இருக்கலாம். இதற்கு எல்லாம் முழு பொறுப்பு தமிழகத்தின் முதல்வர் ஸ்டாலின்தான். எனவே தார்மீக பொறுப்பேற்று முதல்வர் மு. க. ஸ்டாலின் ராஜினாமா செய்ய வேண்டும்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றது முதல் தமிழகத்தில் கொலை, கொள்ளை, கள்ளச்சாராயம், போதை பொருள், கஞ்சா விற்பனை அதிகரித்து வருகிறது. கஞ்சா விற்பனையை தடுக்க 2.மு, 3.மு என்று ஓ போடுவது தான் இவர்களின் வழக்கமாக உள்ளது. சட்ட ரீதியாக கடுமையான நடவடிக்கை எடுத்து இதை தடுக்க முடியவில்லை - என்றார்.

(ஐ)

# அ. தி. மு. கவின் மதுரை மாநாடு; இந்திய தலைவர்கள் பங்கேற்பர்

மதுரை, மே 17

மக்களவைத் தேர்தலுக்கு முன்பு ஓக. 20இல் மதுரையில் நடக்கும் மாநில மாநாடு அ. தி. மு. கவுக்கு திருப்புமுனையை ஏற்படுத்துமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. தி. மு. க., அ. தி. மு. க. ஆகிய இரு பெரும் கட்சிகளும் தேர்தல் நேரங்களில் சோர்ந்து கிடக்கும் தொண்டர்கள், நிர்வாகிகளிடம் எழுச்சியை ஏற்படுத்த அரசியல் மாநாடு நடத்துவர்.

2011 சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்பு ஜெயலலிதா தலைமையில் திருச்சி, கோவை, மதுரையில் நடந்த மாநாடு அ. தி. மு. கவினர் இடையே மிகப் பெரிய எழுச்சியை உண்டாக்கியது. அந்தத் தேர்தலில் அ. தி. மு. க. பெரும் வெற்றி பெற்றது.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு சசிகலா, டி. டி. வி. தினகரன், ஓ. பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி என அணிகளாக அ. தி. மு. க. பிரிந்தது. தோல்விகளால் சோர்ந்துள்ள தொண்டர்களை உற்சாகப்படுத்தவும் 2024 பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டும் மதுரை மாநாடு நடைபெறவுள்ளது.

உட்கட்சிப் பிரச்னையில் வெற்றிபெற்று அ. தி. மு. க. வின் பொதுச் செயலாளராக கே.பழனிசாமி பதவியேற்ற பிறகு நடக்கப்போகும் அ. தி. மு. க.வின் முதல் மாநாடு இதுவாகும்.

இந்த மாநாட்டில் கூட்டணி கட்சிகளின் இந்தியளவிலான தலைவர்களும் பங்கேற்கவுள்ளனர் என்று பழனிசாமி கூறியுள்ளார்.

(ஐ)

# எடப்பாடி பழனிசாமியை விசாரிக்க மத்திய குற்றப்பிரிவு பொலிஸ் முடிவு

சென்னை, மே 17

சொத்துகளை குறைத்துக் காட்டி பொய்யான தகவல் தெரிவித்தார் என்று எடப்பாடி பழனிசாமி மீதான வழக்கை மத்திய குற்றப்பிரிவு பொலிஸார் விசாரிக்கவுள்ளனர்.

கடந்த 2021 சட்டமன்ற தேர்தலின்போது எடப்பாடி பழனிசாமி தனது வேட்பு மனுவின் பிரமாண பத்திரத்தில் அசையும் சொத்துக்கள், அசையா சொத்துக்கள் மற்றும் ஆண்டு வருவாய் ஆகியவற்றை குறைத்து பொய்யான தகவல் தெரிவித்ததாக வழக்கு தொடுக்கப்பட்டது.

மனுவை விசாரித்த நீதிபதி கலைவாணி மனுவில் உண்மை தன்மை இருந்தால் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்த சேலம் மத்திய குற்றப்பிரிவு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார். இதன்படி, 3 பிரிவுகளின் கீழ் அவருக்கு எதிராக வழக்கு நடக்கிறது.

இந்நிலையில், இந்த வழக்கை மத்திய குற்றப்பிரிவு பொலிஸார் விசாரிக்க முடிவு செய்துள்ளது. இது தொடர்பில் முறைப்பாட்டாளர், எடப்பாடி பழனிசாமி ஆகியோருக்கு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

(ஐ)

# கண் பார்வை பாதிப்பு ஏற்பட்ட விவகாரம் இந்தியாவிடம் இழப்பீடு கோரிய இலங்கை

கொழும்பு, மே 17

**இந்திய மருந்துப் பயன்பாட்டினால் கண்பார்வை பாதிப்பு ஏற்பட்ட விவகாரத்தை அடுத்து குறித்த மருந்தை தயாரித்த இந்திய நிறுவனத்திடம் இழப்பீடு வழங்குமாறு இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.**

சுகாதார அமைச்சின் செயலாளரினால் நிறுவனத்திடம் உத்தியோகபூர்வ கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

குறித்த நிறுவனத்திடம் இருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை என்றும், மருந்தைக் கொள்வனவு செய்த முகவர்களிடமும் இதனை அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நோயாளர்களின் அவல நிலை குறித்து கவலை தெரிவித்த அமைச்சர், சில சமயங்களில் தரக் குறைபாடுகள் ஏற்படுகின்றன என்றும் உலக அளவிலும் இதுபோன்ற சம்பவங்கள் நடந்துள்ளதாகவும் கூறினார்.

மேலும் மருந்தைக் கொள்வனவு செய்யும் கொள்வனவாளர் கடந்த ஏழு ஆண்டுகளாக இலங்கைக்கு மருந்துகளை விநியோகித்து வருவதாகவும், இது தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஆணையம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த 12 ஆம் திகதி மூன்று அரச மருத்துவமனைகளில் கண் புரை அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் பயன்படுத்தப்படும் கண் சொட்டு மருந்தைப் பயன்படுத்தியதால் பலருக்கு கண் பார்வை பாதிக்கப்பட்ட சம்பவம் நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

சுமார் 30 நோயாளிகளுக்கு கண் பார்வைக் குறைபாடு ஏற்பட்டமை கண்டறியப்பட்ட நிலையில் அவர்கள் இழப்பீடும் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துக!

## எதிரணிகள் கூட்டாக வலியுறுத்து

கொழும்பு, மே 17

ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான யோசனையை அரசு முன்வைத்தால் அதற்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதற்காக விசேட சட்ட திருத்தம் தேவையெனில் அதற்கான நகர்வுக்கும் முழுமையான ஆதரவு வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சிகளுக் கிடையிலான கூட்டமொன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மேற்படி சந்திப்பின்போது இது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டது எனவும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் சவாலை எதிர்கொள்வதற்கு தாம் தயார் எனவும், அரசு தயாரெனில் அது தொடர்பில் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் எனவும் சஜித் சவால் விடுத்தார். (அ)

# ஹெரோயினுடன் கைதாகியவர் பொலிஸ் பிடியிலிருந்து தப்பினார்

கொழும்பு, மே 17

பல பிடியாணைகள் தொடர்பில் தலங்கம பொலிஸாரால் தலவத்துகொட பிரதேசத்தில், 6400 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொலிஸ் பிடியில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரை கைது செய்து பொலிஸ் வாகனத்தில் ஏற்றி வைத்தியரிடம் ஆஜர்படுத்திவிட்டு மீண்டும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்த போது சந்தேக நபர் தப்பி ஓடினார் என பொலிஸார் தெரிவித்தனர்.

தலவத்துகொட பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார். (அ)

# அடுக்குமாடி குடியிருப்புக்குள் புகுந்து இளைஞனை வெட்டிக்கொன்ற கும்பல்

கொழும்பு, மே 17

பொரளை சிரிசர உயன அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள வீடொன்றிற்குள் புகுந்த மூவர், அங்கிருந்த நபரொருவரைக் கூரிய ஆயுதங்களால் வெட்டிக் கொன்றுள்ளனர் என பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் டி.ஆர்.பிரதீப் குமார் (வயது-28) என்ற இளைஞரே உயிரிழந்தார்.

தனிப்பட்ட தகராறு ஒன்றின் அடிப்படையில் சந்தேகநபர்கள் மூவரும் குறித்த வீட்டுக்குள் புகுந்து இந்தக் கொலையைச் செய்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

குறித்த மூவரும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தற்போது குறித்த பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# இடர்களில் 7 பேர் காயம்; ஒருவரைக் காணவில்லை

கொழும்பு, மே 17

நிலவும் பலத்த மழையுடனான வானிலையினால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்கி ஒருவர் காணாமல்போயுள்ளதுடன், மேலும் 07 பேர் காயமடைந்துள்ளனர்.

நாட்டின் 06 மாவட்டங்களில் 1744 குடும்பங்களைச் சேர்ந்த 6564 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சுமார் 73 வீடுகளுக்கு பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளதாக நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அக்குரஸ்ஸ, பாவன்வெல்ல பகுதியில் வெள்ளத்தினால் சேர்ந்த கழிவுகளை அகற்றிக் கொண்டிருந்த ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போயுள்ளார்.

இவ்வாறு காணாமல் போயுள்ள பஹல அத்துரலிய பகுதியைச் சேர்ந்த 42 வயதான நபரை தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, கிங் மற்றும் நில்வளா கங்கைகளில் சிறு அளவிலான வெள்ளம் ஏற்படுவதற்கான வாய்ப்பு காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நில்வளா கங்கையில் நீர்மட்டம், பானடுகம மற்றும் தல்கஹகொட பகுதிகளில் சிறு வெள்ள மட்டத்தை எட்டியுள்ளதாக திணைக்களம் கூறியுள்ளது.

பத்தேகம பகுதியில் கிங் கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே குறித்த பகுதிகளில் வாழும் மக்கள் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்படவேண்டுமென திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதேவேளை, தெனியாய - பட்டாதுர பகுதியில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

அனர்த்தத்தில் எவருக்கும் காயமேற்படவில்லை என்பதுடன் வீடு மாத்திரம் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# மொட்டு எம்.பிக்கள் 10 பேர் எதிரணியில்

## அமைச்சுப் பதவி வழங்காததால் விரக்தி

கொழும்பு, மே 17

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சுப் பதவி வழங்காமல் இழுத்தடித்து வருவதால் அந்தப் பதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மொட்டுக் கட்சி எம்.பிக்கள் 10 பேர் அதிருப்தியடைந்துள்ளனர்.

இதனால் அவர்கள் எதிரணி வரிசையில் அமர்வதற்குத் தீர்மானித்துள்ளனர் என்று அறியமுடிகின்றது.

அவ்வாறு எதிரணி வரிசையில் அமர்ந்தாலும் அவர்கள் மொட்டுக் கட்சி உறுப்பினர்களாகவே இருப்பார்கள் என்றும், அரச எம்.பிக்களின் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை என்றும் அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானது முதல் இந்தப் பிரச்னை இருந்து வருகின்றது. மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ 10 பேர் கொண்ட பெயர்ப்பட்டியலை ரணிலிடம் ஒப்படைத்து அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்குமாறு கேட்டு பல மாதங்களாகியுள்ளன. ஆனால், ரணில் இதோ தருகின்றேன், தருகின்றேன் என்றே இழுத்தடிப்பதால் இவர்கள் இப்போது ஆத்திரமடைந்துள்ளனர். (அ)

# 5 மாவட்டங்களுக்கு அபாய எச்சரிக்கை

கொழும்பு, மே 17

நிலவும் பலத்த மழையுடனான வானிலையினால் 05 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய,

காலி மாவட்டத்தின் நெலுவ, பத்தேகம, யக்கலமுல்ல மற்றும் எல்பிட்டிய பிரதேச செயலக பிரிவுகள், அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வலஸ்முல்ல பிரதேச செயலக பிரிவு, களுத்துறை மாவட்டத்தின் பாலிந்த நுவர மற்றும் வலல்லாவிட்ட பிரதேச செயலக பிரிவுகள், மாத்தறை மாவட்டத்தின் அத்துரலிய, முலட்டியன, அக்குரஸ்ஸ, கொட்டபொல, பிட்டபெத்தர மற்றும் பஸ்கொட பிரதேச செயலக பிரிவுகள், இரத்தினபுரி மாவட்டத்தின் எஹலியகொடை மற்றும் கிரிஎல்ல பிரதேச செயலக பிரிவுகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது. (அ)

# காங்கேசன் சிமெந்து ஆலையில் இரும்புகள் திருடிய 8 பேர் கைது!

யாழ்ப்பாணம், மே 17

காங்கேசன்துறையில் அரசாங்கத்துக்குச் சொந்தமான சிமெந்து தொழிற்சாலையில் பழைய உலோகங்களாக விற்பனை செய்வதற்காக இயந்திர உதிரிப்பாகங்களைத் திருடிய மூன்று பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உட்பட 8 பேரை காங்கேசன்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

“கிடைத்த தகவலின்படி, தொழிற்சாலையின் 735 கிலோ எடையுள்ள உபகரணப் பாகங்களை ஒரு வண்டியில் ஏற்றிச் சென்ற ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்,” என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் ஐவரும் நல்லிணக்கபுரம் மற்றும் மாவைகலட்டி பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்.

ஐந்து பேரிடம் நடத்திய விசாரணையில், தொழிற்சாலையில் இருந்த இயந்திர உதிரிப்பாகங்களை திருட உதவிய மூன்று பேர் பாதுகாப்பு தரப்பினர் என்பது தெரியவந்துள்ளது.

இதன்படி, தொழிற்சாலையின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த மூன்று பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த தொழிற்சாலை சில காலமாக மூடப்பட்டுள்ளது. தற்போது அங்குள்ள இயந்திரங்கள்கூட செயலிழந்து விட்டதாக பொலிஸார் கூறினர். (அ)

# வடக்கு-கிழக்கு தமிழரின் தாயகப் பிரதேசம் இதனை விட்டுக்கொடுக்க நாம் தயாரில்லை!

## கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியம் வலியுறுத்து

மட்டக்களப்பு, மே 17

**வடகிழக்கில் முன்னெடுக்கப்படும் பௌத்த மயமாக்கல் மற்றும் நில அபகரிப்புகளைத் தடுப்பதற்கு அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும், கட்சி பேதங்களை கடந்து ஒன்றிணைந்து போராடமுன்வரவேண்டும் என கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவசிறி கணேசலோகநாதன் குருக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உணர்வூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு நொச்சிமுனையில் உள்ள ஒன்றியத்தின் அலுவலகத்தில் நினைவு நிகழ்வு நடைபெற்றது.

கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவசிறி லோகநாதன் குருக்கள் தலைமையில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் திருகோணமலை மற்றும் அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து இந்துக் குருமார்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் அலுவலகத்தில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு, உயிர்நீர்த்தவர்களின் நினைவாக மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன், படுகொலை செய்யப்பட்ட மக்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனையும் முன்னெடுக்கப்பட்டு, அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து கல்லடி, சிவானந்தா தேசிய பாடசாலைக்கு முன்பாக உப்புக் கஞ்சி காய்ச்சப்பட்டு அதனை மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வுகள் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், இந்துக் குருமார் ஒன்றிய உறுப்பினர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவசிறி கணேசலோகநாதன் குருக்கள், முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னர் உப்புக் கஞ்சியை மட்டுமே தமது உணவாக கடைப்பிடித்தனர். அதனை மீட்டிப்பாக்கும் வகையிலும் எதிர்கால சமூகத்திற்கு இந்த விடயம் தெரியவேண்டும் என்பதற்காகவும் இதனை வருடாந்தம் நாங்கள் நினைவுகூர்ந்து வருகின்றோம்.

அனைவரும் இவ்வாறான நிகழ்வுகளில் இணைந்துகொள்ளவேண்டும் என்ற கோரிக்கையினை நாங்கள் முன்வைக்கின்றோம்.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் அனுஷ்டிக்கும் இந்த நேரத்தில் தமிழ்த் தேசியத் கட்சிகளுக்கும் தமிழ் தேசியத்தில் பற்றுக்கொண்டவர்களுக்கு ஒரு கோரிக்கையை கிழக்கிலங்கை இந்தக்குருமார் ஒன்றியத்தினூடாக முன்வைக்க விரும்புகின்றோம்.

தற்போது தையிட்டி, திருகோணமலை போன்ற இடங்களில் பௌத்தமயமாக்கலை மூலாதாரமாக கொண்டு பௌத்தர்கள் இல்லாத இடங்களிலெல்லாம் தற்போது புதுசுபுதுசாக பௌத்த ஆலயங்கள் நிறுவப்படுகின்றன.

இந்த நேரத்தில் தமிழ் தேசியம் சார்ந்த அனைவரும் கட்சி பேதங்களை மறந்து எமது நிலப் பிரதேசத்தினை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எங்கள் எல்லோருக்கும் இருக்கின்றது.

ஆகவே தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு எமது பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் பௌத்தமயமாக்கல், நில அபகரிப்புகளை தடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணையவேண்டும்.

வடகிழக்கு தமிழர்களின் தாயகப்பிரதேசம். இதனை யாருக்கும் விட்டுக்கொடுக்க நாங்கள் தயாரில்லை. அவ்வாறான சிந்தனையுடன் செயலாற்ற முன்வரவேண்டும் என அனைத்து தமிழ் கட்சிகளிடமும் வேண்டிக்கொள்கின்றோம்-என்றார்.

# ஜனாதிபதி வேட்பாளரை உரியநேரம் அறிவிப்போம்

## மொட்டுக் கட்சி கூறுகிறது

கொழும்பு, மே 17

உரிய நேரத்தில் எமது ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்போம் என்று மொட்டுக் கட்சி எம்.பி. திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் தொடர்பில் கட்சிகளுக்குள் இப்போதே கதை அடிபடத் தொடங்கியுள்ளது. இப்போதே இது பற்றிப் பேச வேண்டிய தேவை இல்லை.

நாங்கள் 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி ஒருவரைக் கொண்டு வந்தோம். அவரை ஜனாதிபதியாக்குவதற்கு நாம் கடுமையாக உழைத்தோம்.

பல எதிர்பார்ப்புகளுடன் - கனவுகளுடன்தான் அவரைக் கொண்டு வந்தோம். ஆனால், திறமையற்ற நிர்வாகம் காரணமாக நிலைமை தலைகீழாக மாறியது.

கோட்டாபய ராஜபக்ஷவைக் கொண்டு வந்தோம். அனைத்து வேலைத்திட்டங்களுக்கும் ஆதரவு வழங்கினோம். ஆனால், அவரால் எதுவும் செய்ய முடியவில்லை.

இப்போது புதிய ஜனாதிபதி ஒருவர் வந்துள்ளார். அவரது வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டியது எங்களது கடமை. அதைவிட்டுவிட்டு இப்போதே அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் பற்றிப் பேசத் தேவையில்லை.

உரிய நேரத்தில் அந்த வேட்பாளரை நாம் வெளியே கொண்டு வருவோம். அவர் ரணிலாகவும் இருக்கலாம் அல்லது வேறு ஒருவராகவும் இருக்கலாம். இப்போது அது பற்றி நாம் கட்சிக்குள் விவாதம் நடத்தவில்லை.

மக்களுக்கு யார் ஜனாதிபதி என்பது முக்கியமல்ல. அவர்களுக்குத் தேவை நாட்டைச் சரியான முறையில் கொண்டு செல்கின்ற ஒருவர்தான். அப்படியான ஒருவர்தான் ஜனாதிபதியாக வேண்டும்-என்றார். (அ)

# தமிழ் இனவாதிகளுக்கு துணைபோகிறது அரசு!

## அஸ்கிரிய பீடத்தின் தேரர் எச்சரிக்கை



கொழும்பு, மே 17

பௌத்த பாரம்பரியத்தை வடக்கிலும் கிழக்கும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அஸ்கிரிய பீடத்தின் பிரதிப் பதிவாளர் நாரம்பனாவே ஆனந்த தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் உள்ள பௌத்த புனித ஸ்தலங்களுக்கு எதிராக இனவாத தமிழ் அரசியல்வாதிகளும், தீவிரவாதக் குழுக்களும் எதிர்ப்பு தெரிவித்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது இன மோதலை உருவாக்கும் திட்டமிட்ட செயலாகும் என அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மைக்காலமாக வடக்கு, கிழக்கில் பௌத்த விகாரைகள் மற்றும் தொல்பொருள் இடங்களுக்கு கடும் எதிர்ப்புக்கள் காணப்படுவதை காணக்கூடியதாக உள்ளது.

இனவாத வெறி பிடித்த சில அரசியல்வாதிகளும் அந்த தீவிரவாத அமைப்புகளும் திட்டமிட்டு இந்த இடங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை பாரதூரமானது.

270 வருடங்களுக்கு முன்னர் இந்த இலங்கைப் பெருமக்கள் சந்தித்த வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலையில் பல சியாமியத் துறவிகள் மற்றும் பௌத்த தூதுக்குழுவொன்று வந்திறங்கியதே அண்மைய சம்பவம்.

இந்த தமிழ் இனவாத அமைப்புகளின் சில பல்கலைக்கழக மாணவர் குழுக்கள் இந்த இடத்துக்கு வந்து கடுமையான எதிர்ப்பை முன்வைத்திருந்தன.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் செயல்படவில்லை என்றால், நாட்டில் ஒரு தீவிரமான மத மற்றும் பிற தேசிய நெருக்கடியை உருவாக்குவதைத் தடுக்க வழி இல்லை. தற்போதைய அரசாங்கமும் இதில் கவனம் செலுத்தாமல் செயற்பட்டு வருவதாக நாரம்பனை ஆனந்த தேரர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்று தற்போதைய அரசாங்கத்தில் உள்ள எவரும் இவ் விடயம் தொடர்பில் பேசுவதில்லை.

இன்றைய அரசாங்கம் ஆளுநர்களை நியமிக்கும் போதும் சிங்கள பௌத்த மக்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதை காணக்கூடியதாக உள்ளது.எனவே பௌத்த பாரம்பரியத்தை வடக்கும் கிழக்கும் பாதுகாக்கப்பட வேண்டும்.

நாடு முழுவதிலும் உள்ள பௌத்தர்களும் மதவாதிகளுக்கு மட்டுமன்றி சமய ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு இவ்வாறான தீவிரவாத அமைப்புகளையும் அடிப்படைவாத மதக் குழுக்களையும் ஒடுக்கவேண்டும் என்பதை அரசாங்கத்திற்கு வலியுறுத்தவும் நினைவூட்டவும் விரும்புகின்றோம்-என்றார். (அ)

# மறைந்த பிரபல மருத்துவர் சிவகுமாரனுக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் அஞ்சலி





யாழ்ப்பாணம், மே 17

யாழ் போதனா வைத்தியசாலையில் சிக்கலான காலப் பகுதியில் சிறப்பாக கடமையாற்றிய வைத்திய நிபுணர் சிவகுமாரன் காலமானார்.

இந்நிலையில் வைத்திய கலாநிதி அமரர் சபாரட்ணம் சிவகுமாரன் (பொதுவைத்திய நிபுணர்) யாழ்.போதனா வைத்தியாசலையில் 1981 - 1994 காலப்பகுதியில் ஆற்றிய அளப்பரிய பணியை நினைவுகூரும் முகமாக ஆத்மசாந்திப் பிரார்த்தனை யாழ் போதனா வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் மருத்துவர்கள், மற்றும் சக பணியாளர்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (அ)

# கோட்டாவை விரட்டியமை சதியல்ல அது மாபெரும் மக்கள் போராட்டமே!

## கூறுகின்றது சஜித் தரப்பு

கொழும்பு, மே 17

“கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவியிலிருந்து விரட்டியது சதி இல்லை. அது மக்கள் போராட்டம்” - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், மக்கள் போராட்டம் என்பது மொட்டுக் கட்சியினர் கூறுவது போல் சதி இல்லை. அது நியாயமான மக்கள் போராட்டம். மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை காரணமாக அவர்கள் வீதிக்கு இறங்கிப் போராடி கோட்டாவை விரட்டியடித்தனர்.

அன்று வீதிக்கு இறங்கிய அத்தனை மக்களும் எதிர்பார்த்தது சிறந்த மாற்றம் ஒன்றை. அந்த மாற்றத்தைக் கொடுக்காமல் பாராளுமன்ற உறுப்பினர்களாக எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியாது. இதனால் எம்.பிக்கள் மிகவும் கவனமாக - பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டும்.

இந்த நேரத்தில் எமது ஆட்சி இருந்திருந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் அனைத்து



நிபந்தனைகளுக்கும் இணங்கி இருக்கமாட்டோம்.

கடன் மறுசீரமைப்பு செய்ய வேண்டும். ஆனால், செய்கின்ற முறை பற்றி அரசு கூறுவதில்லை.

சிறிய தொழில் முயற்சியாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எந்த நிவாரணத்தையும் இந்த அரசு வழங்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியுடன் இதற்கான வேலைத்திட்டத்தைத் தொடங்க முடியும். இதன் மூலம் உள்ளூர் உற்பத்தியையும் ஏற்றுமதி வர்த்தகத்தையும் அதிகரிக்க முடியும்.

இன்று இந்தப் பொருளாதாரப் பிரச்னை காரணமாக அதிகமான தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இவற்றுக்கு முன்னுரிமை வழங்கும் வேலைத்திட்டங்களுக்கு நாம் பூரண ஆதரவு வழங்கத் தயார்-என்றார். (அ)

# திருகோணமலை சம்பவம் மூலம் அரசியல் நடனம் ஆடவே முயற்சி!

## முன்னிலை சோசலிசக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 17

திருகோணமலையில் இடம்பெற்ற சம்பவத்தை அடிப்படையாக கொண்டு பௌத்த மதத்தைக் காப்பாற்றப்போகிறோம் எனக் கூறிச் சிலர் அரசியல் நடனம் ஆட முயற்சிப்பதாக முன்னிலை சோசலிச கட்சியின் ஊடகப் பேச்சாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

நுகேகொடையில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே புபுது ஜயகொட இவ்வாறு தெரிவித்திருந்தார்.

திருகோணமலைச் சம்பவத்தை வைத்து இனவாதக் குழுக்களுக்கு அரசியல் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கக்கூடாது. சம்பவத்தில் தலையிட்ட இரு தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல் தேவையென்றால், முன்னிலை சோசலிசக் கட்சி தலையிடத் தயார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் வீதியை மறித்த போது பொலிஸார் உரிய முறையில் தலையிடாமல் மோதலுக்கான சூழலை உருவாக்கினர்.

இந்த சம்பவத்தை அடிப்படையாக வைத்து எங்களால் ‘பௌத்த மதத்தை காப்பாற்ற முடியும்’ என்று கூறிச் சிலர் அரசியல் நடனம் ஆட முயற்சிக்கின்றனர்.

எதிர்காலத்தில் இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இருக்க அனைத்து தரப்பினரும் கவனம் செலுத்தவேண்டும் -என்றார். (அ)

# வடக்கு-கிழக்கில் பௌத்தத்துக்கு எதிரான செயல்பாட்டுக்கு ஆதரவளிக்கிறார் ரணில்

## சாடுகின்றார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, மே 17

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த மதத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தெற்கில் பௌத்த பற்றாளர் போன்று செயற்படுவதாக தேசிய சுதந்திர முன்னணியில் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு இவ்வாறு அவர் பதில் வழங்கினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2024 ஆம் ஆண்டு ஜனாதிப



தித் தேர்தல் வெற்றிக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறுபான்மை அரசியல் கட்சிகளின் கைபொம்மையாகச் செயற்படுகிறார்.

இனப்பிரச்னைக்கு தீர்வு வழங்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் செய்கிறார்.

நாட்டு மக்கள் ஒருபோதும் ரணிலை அரச தலைவராக தெரிவு செய்யமாட்டார்கள்.

மகாவலி அதிகார சபையை இரத்து செய்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மகாவலி அதிகார சபையை இரத்து செய்தால் அதன் பொறுப்பாக்கத்தில் உள்ள அரச காணிகள் பிரதேச சபைகளுக்கு உரித்தாகும்.

அவ்வாறான நிலை ஏற்பட்டால் பிரதேச சபை அதிகாரிகள் தமக்கு இணக்கமானவர்களுக்கு காணிகளை பகிர்ந்தளித்துக் கொள்வார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அரசியல்வாதிகள் இதனையே எதிர்பார்க்கிறார்கள்-என்றார். (அ)

# கொழும்பில் போடப்பட்ட விசேட பாதுகாப்பு நீக்கம்

கொழும்பு, மே 17

கொழும்பில் பலப்படுத்தப்பட்டிருந்த விசேட பாதுகாப்பு நேற்று முன்தினம் முதல் நீக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வழமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாயர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், இராணுவம் மற்றும் பொலிஸ் கலகத் தடுப்புப் பிரிவினர் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் கடந்த வெள்ளிக்கிழமை இரவு முதல் பலத்த பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார். (அ)

# புலம்பெயர் தொழிலாளர்களுக்கான வீடமைப்பு திட்டம் விரைவில் ஆரம்பம்!



கொழும்பு, மே 17

புலம்பெயர் இலங்கை தொழிலாளர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து இந்த வீடமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

புலம்பெயர் தொழிலாளர்கள் உட்பட வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் தேவைக்கு ஏற்ப நகர்ப்புற அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் கிராமிய தனிநபர் வீட்டுத் தொகுதிகளாக இந்த வீடமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான நிதிப் பங்களிப்பை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் வழங்க உள்ளதாக தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று நகர மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகேவுடன் இடம்பெற்றதுடன், எதிர்வரும் திங்கட்கிழமை புலம்பெயர் தொழிலாளர்களின் வீட்டுத் தேவைகள் தொடர்பான கணக்கெடுப்பை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவல் இரண்டு வாரங்களுக்குள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுவதுடன், நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பிராந்திய செயலாளர்களுடனும் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாகவும், தூதரகங்கள் ஊடாகவும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாகவும் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 5ஆம் நாள் நினைவு யாழ்.பல்கலையில்



யாழ்ப்பாணம், மே 17

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் ஐந்தாம் நாள் நினைவேந்தல் யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை தூபியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றது.

இதன்போது மாணவர்களால் உயிர்நீத்த உறவுகளுக்கு ஈகச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. (அ)

பிரவீன்

# சூடான் உள்நாட்டுப் போர்:

# பின்னணியில் ரஷ்யாவின் மேலாதிக்க நோக்கம்!

ஆப்பிரிக்க கண்டத்தின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ளது, சூடான். 3.95 கோடி மக்கள் தொகை கொண்ட நாடு. 65 சதவிகித பேர் வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கின்றனர். பெரும்பான்மையான மக்கள் இஸ்லாம் மதத்தை பின்பற்றுகின்றனர். தங்கம், குரோமியம், இரும்பு போன்ற கனிம வளங்கள் நிறைந்து காணப்படுகிறது. அமெரிக்கா, ரஷ்யா போன்ற ஏகாதிபத்திய நாடுகள் அவற்றை போட்டி போட்டுக் கொண்டு கொள்ளையடிக்கின்றன.

கடந்த சில வாரங்களாக, சூடான் நாட்டில் ராணுவத்திற்கும் விரைவு ஆதரவுப் படைகள் எனப்படும் துணை ராணுவத்திற்கும் இடையே உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதன் விளைவாக, கிட்டதட்ட 7 லட்சம் மக்கள் நகர்ப்புறங்களில் இருந்து கிராமப்புறங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். 600 க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

மின்சாரத் தடை, தண்ணீர், உணவுப்பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் தட்டுப்பாட்டால் மக்கள் அவதிப்படுகின்றனர். பொதுமக்களின் வீடுகளை ராணுவ வீரர்கள் ஆக்கிரமித்துள்ளனர். துப்பாக்கி முனையில் மக்களை மிரட்டி உணவுப்பொருட்களையும் பணத்தையும் வாகனங்களையும் கொள்ளையடிப்பதாக சூடானில் இருந்து தப்பித்து வந்த மக்கள் பயத்துடன் கூறுகின்றனர்.

சூடான் நாட்டு மக்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, அண்டை நாடுகளான எகிப்து, சாட், தெற்கு சூடான் ஆகிய நாடுகளுக்கு தப்பித்துச் செல்கின்றனர். தப்பிச் செல்ல முயலும் பொது மக்களின் முக்கிய வழித்தடமாக அந்நாட்டின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள போர்ட் சூடான் என்ற துறைமுக நகரம் மாறியுள்ளது. இந்தியா, சவுதி அரேபியா, அமெரிக்கா போன்ற நாடுகளும் தங்கள் நாட்டு மக்களை சூடானிலிருந்து மீட்டு வருகின்றனர்.

இப்போர் நாட்டின் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக, இரு இராணுவத் தலைவர்களுக்கிடையே உள்ள போட்டியினால் நடத்தப்படுவதாக முதலாளித்துவ பத்திரிகைகளில் கூறப்படுகிறது. அது பாதி உண்மைதான். ரஷ்ய ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்க நோக்கம் என்பதுதான் மீதி.

கடந்த 2020-ஆம் ஆண்டில் ரஷ்யாவும் சூடானும், போர்ட் சூடானில் ரஷ்ய கடற்படை தளத்தை அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்த தளத்தை, ரஷ்யா செங்கடல் பகுதியில் தனது ஆதிக்கத்தை செலுத்துவதற்கான கருவியாகப் பார்க்கிறது.

சூடானில் கனிம வளங்களை கொள்ளையடிப்பது என்பதை தாண்டி, ரஷ்யா தன்னுடைய மேலாதிக்க நோக்கத்திற்காக ஆப்பிரிக்க கண்டத்தில் சூடானை தனக்கான செல்வாக்கு மண்டலமாக உருவாக்க விழைகிறது.

**இரு இராணுவப் படைகளும் அதிகாரத்துக்கான போட்டியும்**

சூடான் இராணுவத்தின் தலைவர் அப்தெல் ஃபத்தா அல்-புர்ஹான் என்பவர். துணை இராணுவத்தின் தலைவர் முகமது ஹம்தான் டகாலோ. இருவருக்குமிடையே உள்ள முக்கிய பிரச்சினை, துணை இராணுவப் படையினரை இராணுவத்தில் இணைப்பதும், அப்படி நடந்தால் படைகளுக்கு யார் தலைமை தாங்குவது என்பதை பற்றியதும் தான்.

ஒவ்வொரு படைகளிலும் கிட்டதட்ட ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட படைவீரர்கள் உள்ளனர். இரு படைகளும் மக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவிப்பதில் சளைத்தது அல்ல. கிட்டதட்ட 30 ஆண்டுகளாக ஒமர் அல் - பஷீர் சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து போராடிய மக்களை கொடூரமாக ஒடுக்கியுள்ளது.

2019 ஆம் ஆண்டு அல்-பஷீர் ஆட்சி அகற்றப்பட்டு, மக்கள் போராட்டத் தலைவர்களும் இரு இராணுவப் படைகளும் இணைந்து “சாவரின் கவுன்சில்” என்ற பெயரில் சிவில் - இராணுவக் கூட்டாட்சி நிறுவப்பட்டது. பிரதமராக அப்துல்லா ஹம்டாக் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2021 இல் சிவில் - இராணுவக் கூட்டாட்சியையும் இராணுவம் கலைத்து அதிகாரம் அனைத்தையும் தன்வசப்படுத்தியது. இராணுவக் கவுன்சில் ஆட்சி நிறுவப்பட்டது. அதன் தலைவராக அல்-புர்ஹான் மற்றும் துணைத்தலைவராக டகாலோ பதவியேற்றனர்.

சிவில் - இராணுவக் கூட்டாச்சி நிறுவப்படும் போதே, 2023-ல் ‘ஜனநாயக’ (பெயரளவிலான) ஆட்சி நிறுவப்படும் என்று நாட்டு மக்களுக்கு உறுதியளிக்கப்பட்டது. 2021-ல் இராணுவம் ஆட்சியை கைப்பற்றிய போதும், அதே வாக்குறுதியை இராணுவத் தலைவர்களும் அளித்தனர்.

ஜனநாயக ஆட்சியை நிறுவதற்காக துணை இராணுவப் படையை இராணுவத்துடன் இணைக்க வேண்டும் என்று முடிவெடுக்கப் பட்டிருந்தது. அல்-புர்ஹான் 2 ஆண்டுகளில் இந்த இணைவை செய்து முடிக்க வேண்டும் என்று கூறுகிறார் டகாலோவோ 10 ஆண்டுகள் அவகாசம் வேண்டும் என்று கூறுகிறார்.

மேலும், டகாலோ-வின் அதிகாரத்தை தனக்கு அச்சுறுத்தலாக அல்-புர்ஹான் பார்க்கிறார். அதைக் கட்டுப்படுத்த விரும்புகிறார். டகாலோவிடமும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்ற விருப்பம் உள்ளது. அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக இவர்களுக்கிடையே உள்ள போட்டிதான் தற்போது உள்நாட்டு போராக வெடித்துள்ளது.

ஒருபுறம், சூடான் உள்நாட்டு போரிற்கு இரு இராணுவத் தலைவர்களுக்கிடையே உள்ள அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான போட்டி காரணம் என்றாலும், மறுபுறம் ரஷ்ய ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்க நோக்கமும் முக்கியமான காரணம் ஆகும்.





ரஷ்யா, டகாலோவுக்கு ஆதரவாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சூடான் நாட்டில் உள்ள பெரும்பாலான தங்க சுரங்கங்கள் துணை இராணுவப் படையின் கட்டுப்பாட்டில் தான் உள்ளன. மேலும், துணை இராணுவப் படை சூடானின் அண்டை நாடுகளிலும் தங்கத்தை வெட்டி எடுப்பது, விற்பனை செய்வது ஆகியவற்றிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

ரஷ்ய துணை இராணுவப் படை மூலம் மட்டுமல்லாது, எல் ஜெனி பிரிகோசிம் தலைமையிலான “வேக்னர்” என்ற ரஷ்ய தனியார் கூலிப்படை குழு மூலமும் தனது கனிம வளக் கொள்ளையை நிகழ்த்தி வருகிறது. இக்கூலிப்படை, ஆர்.எஸ்.எப்-கு அரசியல், இராணுவ உதவிகளை வழங்கி வருகிறது.

உள்நாட்டுப்போரில் டகாலோ தோற்கடிக்கப்பட்டால் ரஷ்யாவின் கனிம வளக் கொள்ளை பாதிக்கப்படும் என்பதைத் தாண்டி, டகாலோவை வெற்றி பெற வைப்பதன் மூலம் கனிம வளங்களை கட்டற்ற முறையில் சுரண்ட வேண்டும் என்ற எண்ணமும், ரஷ்யாவிடம் உள்ளது.

சூடானில் 40,000-க்கும் மேற்பட்ட தங்க சுரங்கங்கள் உள்ளன. 60 தங்க சுத்திகரிப்பு நிலையங்கள் இயங்குகின்றன. நாட்டின் பொருளாதாரத்திற்கு தங்கம் முக்கிய ஆதாயமாகும். 2022 ஆண்டில் சூடான் அரசு 20,511 கோடி ரூபாய் மதிப்புள்ள 41.8 டன் தங்கத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. நாட்டின் மொத்த ஏற்றுமதியில் தங்கத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் 40 சதவிகிதம் ஆகும்.

சூடானில் வேக்னர் குழு “மெரோ கோல்ட்” என்ற நிறுவனத்தின் மூலம் தன் செயல்பாடுகளை அமைத்துக் கொண்டுள்ளது. சூடானின் தங்க உற்பத்தியில் 90 சதவிகிதம் ரஷ்யாவிற்கு கடத்தப்படுவதாக சி.என்.என் பத்திரிகை கூறுகிறது. கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 16 முறை விமானத்தின் மூலம் தங்கத்தை கடத்தியுள்ளதாக கூறுகிறது. இதன் விளைவாக, ரஷ்யா 2010 ஆம் ஆண்டு வைத்திருந்த தங்கத்தை விட நான்கு மடங்கு அதிக தங்கம் வைத்திருப்பதாக குற்றம் சாட்டுகிறது.

இரு மாதங்களுக்கு முன்பு, எல் ஜெனி பிரிகோசிம் சூடானுக்கு வந்து டகாலோவை சந்தித்துள்ளார். அதன் பிறகு டகாலோ ரஷ்யாவிற்கு சென்று ரஷ்ய அதிபர் புதினை சந்தித்துள்ளார். அதன் பிறகே உள்நாட்டுப் போர் துவங்கியுள்ளது. மேலும் ரஷ்யா, உள்நாட்டுப் போரில் ஆர்.எஸ்.எப் படைகளுக்கு ஆயுத உதவிகளை வழங்கி வருவதாகவும் தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

தங்கம் போன்ற கனிம வளங்களை கொள்ளையடிப்பதை தாண்டி, ரஷ்யாவிற்கு சூடான், பொருளாதார மற்றும் இராணுவ ரீதியாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். செங்கடல் கடற்கரையில் அமைந்துள்ள போர்ட் சூடானில் கடற்படைக் கப்பல்களை நிறுத்துவதற்கான வசதிகளை உருவாக்க உள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது. இதன் மூலம் செங்கடலில் ஆதிக்கம் செலுத்தவும் ரஷ்யா விழைகிறது.

2021-இல் சிவில் - இராணுவக் கூட்டாட்சியைக்



கலைத்து இராணுவம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதும் ரஷ்ய நலனுக்காகத் தான். சிவில் - இராணுவக் கூட்டு அரசாங்கம், ரஷ்யா மெரோ கோல்ட் நிறுவனத்தின் சொத்துகளை அல்-சோலா என்ற சூடான் நிறுவனத்திற்கு மாற்றுவதை நிறுத்திய ஒரு மாதத்திற்குப் பிறகுதான், இராணுவம் ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தியது.

**ஏகாதிபத்தியங்களின் வேட்டைக்காடு:**

சூடானின் கனிம வளங்களைக் கொள்ளையடிப்பதற்காகவும், மேலாதிக்கம் செய்வதற்காகவும் அமெரிக்கா நீண்டகாலமாக தன் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் கடன்களை வாரி வழங்குவது; ஆட்சியாளர்களை மிரட்டுவதற்காக பணப்பரிவர்த்தனைகளை நிறுத்துவது ஆகியவற்றை மேற்கொள்கிறது. 2021 இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிய போது, உலகவங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் 49 ஆயிரம் கோடி ரூபாய் (ஆறு பில்லியன் டாலர்) நிதிப்பரிவர்த்தனையை முடக்கியது.

2011 ஆம் ஆண்டு சூடானில் இருந்து தெற்கு சூடான் பிரிக்கப்பட்டு தனி நாடாக ஆக்கப்பட்டதும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலனுக்காக தான். தார்ஃப்பூர் பிராந்தியத்தில் இனப்படுகொலையை கட்டவிழ்த்துவிட்ட அல்-பஷீரை போர்க்குற்றவாளியாக சித்தரித்து அவரை மிரட்டிப் பணிய வைத்ததும் தெற்கு சூடானில் மக்கள் விடுதலை இராணுவத்திற்கு ஆயுத உதவிகள் செய்து தனி நாடு கோரிக்கையை கொம்பு சீவி விட்டதும் எண்ணெய் வளத்தை கொள்ளையடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆகும்.

சீனாவும் இந்தப் போட்டியில் களம் இறங்கியுள்ளது. சூடானின் தங்க சுரங்கங்களில் 20-க்கும் மேற்பட்ட சீன நிறுவனங்கள் 820 கோடி ரூபாய் (100 மில்லியன் டாலர்) முதலீட்டில் செயல்பட்டு வருகின்றன. மேலும் சீனா, சூடான் நாட்டில் பல உள்கட்டுமானத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. சூடான் துறைமுகத்தை தார்ஃப்பூர் மற்றும் சாட் வரை இணைக்கும் 4,725 கிலோமீட்டர் ரயில் பாதைகளை சீரமைக்கும் திட்டத்திற்கு சீனா நிதியளித்துள்ளது.

அமெரிக்கா, சவுதி அரேபியா ஆகிய இரு நாடுகளும் சூடானின் இரு இராணுவத் தளபதிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்துவதும் மேலாதிக்க நோக்கத்தில் இருந்துதான். வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி, “அமெரிக்காவின் உடனடி இலக்கு வன்முறையைக் கட்டுக்குள் கொண்டு வருவதும், இரண்டாவது, சிவில் (பெயரளவிலான ஜனநாயக) ஆட்சியை கொண்டு வருவது குறித்து போராடும் குழுக்களை பேச்சுவார்த்தைக்கு அழைப்பது” எனக் கூறியுள்ளார்.

அமெரிக்கா, இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு பதிலாக ‘ஜனநாயக’ ஆட்சியை நிறுவ பாடுபடுவதாக ஒரு தோற்றம் ஏற்படுகிறது. முதலாளித்துவ பத்திரிகைகளும் உள்நாட்டுப் போரைக் காரணம் காட்டி சூடானில் ‘ஜனநாயக’ ஆட்சியை நிறுவதில் அமெரிக்காவின் முயற்சிகள் தோல்வி அடைந்துவிட்டதாக எழுதுகின்றன. அதாவது அமெரிக்கா சூடானில் ‘ஜனநாயக’ ஆட்சியை நிறுவ பாடுபட்டதாம் கேலிக்கூத்து!

அமெரிக்க கார்ப்பரேட் முதலாளிகளின் கொள்ளைக்காகவும், மேலாதிக்க நோக்கத்திற்காகவும் ஒரு பொம்மை ஆட்சியை நிறுவப் பாடுபட்டது் பாடுபட்டு வருகிறது என்பதுதான் உண்மை. சூடானில் அமெரிக்காவும், ரஷ்யாவும் மேலாதிக்கம் செலுத்த விழையும் வடிவங்கள் வெவ்வேறாக இருக்கலாம். ஆனால் நோக்கம் ஒன்றுதான் மேலாதிக்கம். மற்றபடி, வளர்ச்சி, ஜனநாயகம் என்று பேசுவது வெற்று வாய்ஜாலங்கள் தான்.

சூடானில் உள்நாட்டுப் போர் நீடிக்கலாம் அல்லது தற்காலிகமாக முடிவுக்கு வரலாம். சூடானில் மேலாதிக்கம் செலுத்தி செல்வாக்கு மண்டலமாக உருவாக்க விழையும் ஏகாதிபத்தியங்களும், அவர்களின் அடிவருடிகளான ஆளும் வர்க்க இராணுவக் கும்பல்களும் வீழ்த்தப்படாத வரை சூடான் மக்களுக்கு விடிவில்லை. ●

# அரசாங்கத்தின் தேர்தல் தெரிவுகள்

## அண்மைய எதிர்காலத்தில் தேர்தல்களுக்கான வாய்ப்புக்கள் தொடர்ந்து மந்தமாகவே இருக்கின்றன



கலாநிதி ஜெகான் பெரேரா

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்க் கட்சிகளுடன் முன்னெடுத்திருக்கும் பேச்சுவார்த்தைகள் அந்த இரு மாகாணங்களிலும் தேர்தல்களை நடத்துவதற்கு சாத்தியமான ஒரு முன்னோடியாக பார்க்கப்படுகின்றன. திட்டமிட்டபடி உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் மறுப்பதனால் அதன் தார்மீக நியாயப்பாடு பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் ஏதோ ஒருவகையில் தேர்தலை நடத்துவதில் ஜனாதிபதிக்கு அக்கறை இருக்கிறது.

மக்களால் அன்றி பாராளுமன்றத்தினால் தான் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டமை கவனித்துச் சீர்செய்யப்பட வேண்டிய ஒரு தார்மீக நியாயப்பாட்டு பிரச்சினையை தோற்றுவிக்கிறது என்பதை ஜனாதிபதி அறிவார். உள்ளூராட்சி தேர்தல்கள் திரும்பத்திரும்ப ஒத்திவைக்கப்பட்டதற்கு அரசாங்கத்திடம் பணம் இல்லை அல்லது அதற்கு செலவிடும் பணத்தை தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் வேறு தேவைகளுக்கு நல்லமுறையில் பயன்படுத்தலாம் என்று கூறப்படும் காரணங்கள் ஒரு ஜனநாயக அல்லது சட்டத்தின் ஆட்சி நோக்கில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவை அல்ல என்பது தெளிவானது.

இவ்வருட இறுதி அளவில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக மாகாணசபை தேர்தல்கள் நடைபெறும் என்றும் தமிழ்க் கட்சிகளுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அதுவே காரணம் என்றும் ஊகங்கள் வெளியாகின்றன.

பௌத்தர்கள் வாழாத பகுதிகளில் பல பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவது அந்த பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பெரும் மனவேதனையை ஏற்படுத்தியிருக்கிறது. ஜனாதிபதிக்கும் தமிழ்க்கட்சிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் ஆராயப்படும் முக்கிய பிரச்சினைகளில் இந்த பௌத்த விகாரை நிர்மாணமும் ஒன்று. வடக்கு, கிழக்கின் பல்வேறு பகுதிகளில் புராதன பௌத்த அழிபாடுகள் தொல்லியல் திணைக்களத்தினால் கண்டுபிடிக்கப்படுகின்றன. அதேவேளை புராதனமானவையும் அண்மைக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்டவையும் என பல இந்துக்கோவில்கள் இனந்தெரியாத குழுக்களினால் நிர்மூலம் செய்யப்பட்டு வருகின்றன. அந்த பகுதிகளில் பெருமளவில் பாதுகாப்பு படைகளின் பிரசன்னம் இருக்கின்றபோதிலும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவது அதன் பின்னணியில் அரசாங்கம் இருக்கிறது என்ற சந்தேகத்துக்கு வழிவகுத்திருக்கிறது.

தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துவதன் மூலம் இந்த பிரச்சினையை கையாளுவதற்கு ஜனாதிபதி துரிதமாக அக்கறை காட்டியிருக்கிறார். அரசாங்கத்திடம் தற்போது பணம் இல்லை என்பதால் வடக்கு, கிழக்கில் தொல்லியல் திணைக்களத்தின் பணிகளுக்கு பௌத்த பிக்குகள் நிதி வழங்குகிறார்கள் என்பதை ஜனாதிபதியின் விசாரணைக்கு பதிலளித்தபோது அந்த திணைக்கள அதிகாரிகள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு, கிழக்கு 30 வருடங்களாக கவனிக்கப்படாமல் இருந்த காரணத்தினால் அந்த மாகாணங்களில் தொல்லியல் ஆய்வுப்பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதாகவும் தாங்கள் அரசாங்கத்திடம் இருந்து அல்ல பல்வேறு நிறுவனங்களிடம் இருந்து நிதியைப் பெறுவதாகவும் தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதியிடம் கூறியிருக்கிறார். சில சந்தர்ப்பங்களில் தொல்லியல் திணைக்களத்துக்கு பிக்குகளிடம் இருந்து பணம் கிடைக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். தொல்லியல் முக்கியத்துவமுடைய இடங்கள் அரசுக்கு சொந்தமானவை என்று அவை அரசினால் பராமரிக்கப்படுபவையாக இருக்கவேண்டும் என்றும் ஜனாதிபதி கருத்து வெளியிட்டார்.

### சகலரையும் அரவணைக்கும் அணுகுமுறை

இலங்கையின் பௌத்த பாரம்பரியம் நாட்டின் இன, மத பெரும்பான்மையினரின் ஆழமான உணர்வுபூர்வமான மதிப்புக்குரியது. இது அரசினாலும் பெரும்பாலும் பிரதிபலிக்கப்படுகிறது. இலங்கையின் அரசியலமைப்பு ஏனைய மதங்களை பின்பற்றுபவர்களின் உரிமைகளையும் மதிக்கின்றபோதிலும் பௌத்த மதத்துக்கே அதிமுன்னுரிமையை வழங்குகிறது.



தொல்லியல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இலச்சினை தாதுகோபுர உருவத்தைக் கொண்டதாக இருக்கிறது. இந்த கோபுரம் நாட்டின் பௌத்த கலாசாரப் பாரம்பரியத்தின் மிகவும் பரவலான ஒரு அங்கமாக விளங்குகிறது.

இலங்கையில் பௌத்த மதத்துக்கு கொடுக்கப்படுகின்ற விசேட அந்தஸ்து அரசியல்வாதிகளினால் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது. மதம் அல்லது இனம் அல்லது இரண்டுமே ஆபத்துக்குள்ளாகியிருப்பதாகவும் தாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு மக்கள் வாக்குகளை அளித்தால் அவற்றை பாதுகாப்பதாகவும் அரசியல்வாதிகள் கூறுவார்கள். இவர்களில் பலர் தங்களது தேசியவாத கருத்துக்களை வலுப்படுத்துவதற்கு சதிக்கோட்பாடுகளை முன்வைத்து தங்கள் அரசியல் இருப்பை உறுதிசெய்வதற்கு முயற்சிக்கிறார்கள். தேசிய மட்ட அரசியல்வாதிகளில் மிகமிகச் சிலரே இந்த குறுகிய நோக்குடைய தேசியவாதத்தை எதிர்ப்பதற்கு முன்வருகிறார்கள். தற்போதைய ஜனாதிபதி அவர்களில் ஒருவர்.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சியை அடுத்து அறகலய போராட்டத்தின் போது அதிகாரத்தில் இருந்த அரசியல் தலைவர்களின் முறைகேடுகளும் ஊதாரித்தனங்களும் அம்பலப்படுத்தப்பட்டன. இனவாதப் பிரசாரங்களினால் தங்களை இனிமேலும் ஏமாற்றமுடியாது என்று குரல் கொடுத்த இளம் ஆர்ப்பாட்டக்காரர்கள் (அவர்களில் பெரும்பாலானவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள்) இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் சகல குடிமக்களும் சமத்துவமானவர்கள் என்று முழக்கம் எழுப்பினர்.

கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதி பதவியில் இருந்து விரட்டிய அறகலய போராட்டத்தின் விளைவாக நாட்டின் அதியுயர் பதவியை அடைந்த ஜனாதிபதி விக்கிரமசிங்க சமத்துவத்துக்கும் நீதிக்கும் பொருளாதாரக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலின் அவசியத்துக்கும் குரல் கொடுத்த இளைஞர்களை ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுத்தார் என்பது ஒரு முரண்நகையாகும். பதிலாக தேசத்தைக் கட்டியெழுப்பும் மகத்தான பணிக்கு அந்த இளைஞர்களின் சக்தியையும் இலட்சியவாதத்தையும் பயன்படுத்துவதற்கு அவர் முன்வந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரிகளிடம் தனது கருத்தை முன்வைப்பதில் ஜனாதிபதி வெளிக்காட்டிய நேர்மையும் வெளிப்படைத் தன்மையும் இன, மத பன்முகத்தன்மையின் ஒரு நடுநிலையான பிணக்குத்தீர்க்கும் பாத்திரத்தையே அரசு வகிக்கவேண்டும் என்ற பண்பு முறைமையின் ஒரு வெளிப்பாடாகும். திறந்த மனதுடனும் தெளிவாகவும் பேசுவதற்கு அவர் முன்வந்தமையும் சகல தரப்புகளையும் அரவணைக்கக்கூடிய ஒரு பாதையில் அரச நிறுவனங்களை வழிநடத்துவதில் அவர் நாட்டம் காட்டியமையும் இன, மத சிறுபான்மை இனத்தவர்களினால் பெரிதும் வரவேற்கப்பட்டிருக்கும்.

ஜனாதிபதியின் இந்த அறிவுபூர்வமான பண்பை அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டியதன் அவசியத்தை சில மாதங்களுக்கு முன்னர் அவர் வலியுறுத்திய வேளையிலும் காணக்கூடியதாக இருந்தது.

### மந்தமான வாய்ப்புக்கள்

ஒவ்வொரு மாகாணத்திலும் தங்களின் குறிப்பிட்ட விவகாரங்களை நிருவகிக்க தலைவர்களை தெரிவு செய்வதற்கு மக்களுக்கு அதிகாரமளிக்கும் மாகாணசபைகள் என்ற அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட முறைமை ஒன்றை நிறுவுவதே 13 வது திருத்தத்தின் பிரதான அம்சமாகும். ஆனால் நான்கு வருடங்களுக்கும் அதிகமான காலமாக மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படவில்லை. அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட நிறுவனங்களாக மாகாணசபைகள் இயங்கவில்லை.

பதிலாக மாகாணங்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆளுநர்களினால் நிருவகிக்கப்படுகின்றன. இது அதிகாரப் பரவலாக்கத்தை கேலிக்குள்ளாக்குகிறது. மக்களுடன் கலந்தாலோசிக்காமல் தங்களின் இச்சைப்படி ஆளுநர்களினால் ஆளப்படும் நிருவாக அமைப்புக்களாக மாகாணசபகள் மாறிவிட்டன. மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகளை விடவும் கூடுதல் அதிகாரங்களை ஆளுநர்களுக்கு வழங்கும் மாகாணசபைகள் சட்டத்தை மறுபரிசீலனை செய்யவேண்டியது அவசியமாகும்.

ஆனால், 1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாகாணசபைகள் முறை அறிமுகப்படுத்தப்பட்டதால் அதை இலங்கை அரசை பலவீனப்படுத்தக்கூடிய ஒரு இந்திய திணிப்பு என்று சிங்களப் பெரும்பான்மையினர் ஒருவித சந்தேகத்துடன் நோக்குவது துரதிர்ஷ்டவசமானது. கைச்சாத்திடப்பட்ட வேளையில் சர்ச்சைக்குரியதாக இருந்த இந்த சமாதான உடன்படிக்கை நாட்டின் பொது வாழ்வில் தொடர்ந்து குறைத்து மதிப்பிடப்படும் ஒன்றாகவே விளங்குகிறது.

உடன்படிக்கையின் பிரகாரம் விடுதலை புலிகளை நிராயுதபாணிகளாக்க இந்தியா இணங்கிய அதேவேளை இந்திய பாணியை அடிப்படையாகக் கொண்ட மாகாணசபைகளை நிறுவ இலங்கை இணங்கியது. இரு பணிகளுமே முழுமையாக இடம்பெறவில்லை. மாகாணசபைகள் முறை எவ்வாறு நடைமுறைப்படுத்தப் பட்டிருக்க வேண்டுமோ அவ்வாறு செய்யப்படாததால் தற்போது செயற்படாமல் இருக்கும் சூழ்நிலையில் அது ஒரு வீண்விரயமாக நோக்கப்படுகின்ற போக்கை காணக்கூடியதாக இருக்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடங்கி மாகாணசபை தேர்தல்களை நடத்துவதில் உள்ள பிரச்னை அது சிங்களவர்கள் மத்தியில் ஐயுறவுகளை தூண்டிவிடும் என்பதாகும். தற்போது அதிகார மையத்தில் இருந்து அகற்றப்பட்டிருக்கும் குறுகிய தேசியவாத குழுக்கள் அந்த ஐயுறவுகளை தங்களுக்கு அனுகூலமான முறையில் பயன்படுத்த முயற்சிக்கும். ஜனாதிபதி தமிழர்களுக்கு சார்பாக செயற்பட்டு வடக்கும் கிழக்கும் இந்தியாவின் ஆதிக்கத்தில் வருவதற்கு வழிவகுக்கிறார் என்று பிரசாரம் செய்வதிலோ அல்லது வேறு பீதிகளைக் கிளப்பிவடுவதிலோ இந்த குறுகிய தேசியவாத குழுக்களுக்கு எந்தவிதமான தயக்கமும் கிடையாது.

மாகாணசபை தேர்தல்களை நடத்துவதாக இருந்தால் நாட்டில் உள்ள சகல மாகாணங்களிலும் அவை ஒரே நேரத்தில் நடத்தப்படவேண்டும். அத்தகைய ஒரு சூழ்நிலையில், உள்ளூராட்சி தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு தீர்மானித்தபோது எதிர்நோக்கிய திரிசங்கு நிலையை அரசாங்கம் மீண்டும் எதிர்நோக்கும். அண்மைய எதிர்காலத்தில் தேர்தல்களுக்கான வாய்ப்புக்கள் தொடர்ந்து மந்தமாகவே இருக்கின்றன. ●



# ஊருக்குள் புகுந்த கடல் நீர்

மட்டக்களப்பு, மே 17

மட்டக்களப்பு களுதாவளைப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கடல் நீர் உட்புகுந்ததால் அப்பகுதியிலுள்ள மக்கள் மத்தி யில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கடல் நீர் திடீரென கிராமத்தை நேக்கி மேலெழுந்து வருவதை அவதானித்த மீனவர்கள் தமது தோணி, படகுகள், உள்ளிட்ட மீன்பிடி உபகரங்களை பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தினர்.

எனினும் கடல் நீர் தொடர்ந்தும் கிராமத்தை நோக்கி வடிந்து கொண்டிருப்பதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

வருடாந்தம் இக்காலப் பகுதியில் கடல்நீர் பெருக்கெடுப்பதாகவும், அது இம்முறை சற்று அதிகமாகக் காணப்படுவதாக மீனவர்கள் கூறினர்.

இதேவேளை, களுவாஞ்சிகுடி, ஓந்தாச்சிமடம், தேத்தாதீவு, மற்றும் செட்டிபாளையம் போன்ற பல பகுதிகளிலுமுள்ள கடற் பிராந்தியங்களிலும், இவ்வாறு கடல் நீர் கிராமங்களை நோக்கி உட்புகுந்துள்ளதாக மக்கள் தெரிவித்தனர். (அ)

# ஜனாதிபதி வேட்பாளர் சஜித்தே ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்!

கொழும்பு, மே 17

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை வேட்பாளராக நிறுத்த ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் செயல்குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

நேற்று மாலை நடைபெற்ற செயல்குழு கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அவர் 2019 ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிட்டார், ஆனால் கோட்டாபய ராஜபக்ஷவிடம் தோல்வியடைந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி, இலங்கையின் முதன்மை எதிர்க்கட்சியாகும். இது 2020 இல் ஐக்கிய தேசிய முன்னணியின் பிளவுக்குப் பின் உருவாக்கப்பட்டது. கட்சி தற்போது சஜித் பிரேமதாஸ தலைமையில் உள்ளது.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாக நடத்துவதற்கான அரசின் பிரேரணைக்கு எதிர்க்கட்சிகள் தமது ஆதரவை வழங்கும் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், அரசு ஜனாதிபதித் தேர்தலை தமது வசதிக்காகவும், தங்களுக்கு வசதியான காலக்கெடுவிற்கும் ஏற்ப நடத்த முயற்சிப்பது ஜனநாயகத்தை மீறுவதாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியோ அல்லது அவருக்கு ஆதரவானோரின் பணிப்புரைக்கு அமைய ஜனாதிபதி தேர்தலை திட்டமிடுவது தவறானது என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை விரைவில் நடத்துவதற்குத் தேவையான சட்டவிதிகளை கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகள் தமது ஆதரவை வழங்கும் என்றும் சஜித் பிரேமதாஸ உறுதியளித்துள்ளார்.(ஐ)

# மகிந்த - ஜெரோம் தொடர்பு குறித்து விசாரிக்கப்படும்

கொழும்பு, மே 17

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் சர்ச்சைக்குரிய மத பிரசாரகர்களான ஜெரோம் பெர்னாண்டோ, உபேர்ட் ஏஞ்சல் இடையிலான தொடர்புகள் குறித்து விசாரிக்கப்படவுள்ளன.

மத பிரசாரகரான ஜெரோம் பெர்னாண்டோ பௌத்தம் மற்றும் பிற மதங்கள் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டிருந்தார். இது தொடர்பான விசாரணை நடைபெற்று வருகின்றது.

இதனிடையே, பிரசாரகர்களான ஜெரோம் பெர்னாண்டோ, உபேர்ட் ஏஞ்சல் ஆகியோருக்கும் இடையே உள்ள தொடர்புகள் குறித்து விசாரிக்கப்படும் என்று புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மதப் பிரசாரகரான ஜெரோம் பெர்னாண்டோ அண்மையில் மத ரீதியான சர்ச்சை கருத்துகளை வெளியிட்டிருந்தார். பௌத்த மதத்துக்கு எதிராக அவர் வெளியிட்ட கருத்துகள் நாட்டில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தன. (ஐ)

# ‘பண்டி’ உரம் ரூ. 15,000

கொழும்பு, மே 17

சிறுபோகத்தை முன்னிட்டு 50 கிலோ ‘பண்டி’ (Bandi) உர மூடையின் விலை 15,000 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, அனைத்து விவசாய சேவை மத்திய நிலையங்களின் ஊடாக இந்த விலைக்கு உரத்தை கொள்வனவு செய்ய விவசாயிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

விலை நிர்ணய குழு வழங்கிய அனுமதிக்கமைய, இந்த விலைக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# “மொட்டு எம்.பிக்களைப் பாதுகாப்பதனால் ரணிலே அவர்களின் ஜனாதிபதி வேட்பாளர்”

கொழும்பு, மே 17

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மொட்டு எம்.பிக்களை நல்லமுறையில் பாதுகாத்துக் கொண்டு போகின்றார். இதனால் ரணிலையே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு மொட்டுக் கட்சியினர் விரும்புகின்றனர்” - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

மொட்டுக் கட்சி எம்.பிக்களுக்குத் தேர்தலில் விருப்பமில்லை. இவர்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவர்களை நல்ல முறையில் பாதுகாத்துக்கொண்டு போகின்றார். இதனால் ரணிலையே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு மொட்டுக் கட்சியினர் விரும்புகின்றனர்.

நாம் எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவையே வேட்பாளராக நிறுத்துவோம். இதில் மாற்றமில்லை. அவரே ஜனாதிபதியாகத் தெரிவாவார்-என்றார். (அ)






# சுகாதார மேம்பாடு குறித்து மக்களுடன் கலந்துரையாடல்



அக்கரைப்பற்று, மே. 17

அம்பாறை மாவட்ட அலிகம்பை பிரதேச மக்கள் எதிர்நோக்கி வரும் மருத்துவ தேவைகள் தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் தலைமையிலான குழுவினர் விஜயமொன்றை மேற்கொண்டு அப்பிரதேச சிவில் சமூகத்தினருடன் கலந்துரையாடினர்.

குறித்த பிரதேச மக்களுக்கு வைத்திய சேவைகளை வழங்குவதற்கும், அம்மக்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கும், தொற்றுநோய்கள் மற்றும் தொற்றாநோய்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்குவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

தற்போது குறித்த பிரதேசத்தில் காணப்படுகின்ற மக்களின் போக்குவரத்து மற்றும் பொருளாதார நெருக்கடி என்பனவற்றை கருத்திற்கொண்டும் குறித்த பிரதேசத்திலேயே வைத்திய சேவைகளை வழங்குவதற்குமான நகர்வுகளை முன்னெடுப்பதற்காக தொற்றுநோய்கள் மற்றும் தொற்றுநோய்கள் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வைத்திய சேவைகள் குறித்த பிரதேச ஆரம்ப வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனை இன்னும் மேம்படுத்தி பல வைத்திய சேவைகளை மக்களுக்கு வழங்கும் நோக்கிலேயே செயலாளர் தலைமையிலான குழுவினர் இந்த விஜயத்தை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# முறிந்து வீழ்ந்த ஆலமரம்



மட்டக்களப்பு, மே. 17

மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெல்லாவெளி பாலையடிவட்டை பிரதான வீதியில் ஆல மரம் முறிந்து வீழ்ந்ததில் அப் பகுதிக்கான போக்குவரத்தும், மின் விநியோகமும் தடைப்பட்டது.

வெல்லாவெளி பால் குளிரூட்டும் நிலையத்துக்கு முன்பாக இருந்த மிகப் பழமையான ஆலமரமே முறிந்து வீழ்ந்துள்ளது. வெல்லாவெளி பிரதான வீதியூடான பல பகுதிகளின் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டன.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த களுவாஞ்சிகுடி மின்சார சபையினர் மின் விநியோகத்தை வேறு நிலைகள் மூலம் வழங்கி மின் இணைப்பை திருத்தும் பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# கிழக்கு மாகாணத்தில் நடந்த பூப்பந்தாட்ட பயிற்சிப்பட்டறை



மட்டக்களப்பு, மே. 17

உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையின் கிழக்கு மாகாணத்திற்கான பூப்பந்தாட்ட பயிற்சிப்பட்டறை முதல்முறையாக அம்பாறை மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இப் பயிற்சி முகாமின் பயிற்றுவிப்பாளராக உலக தமிழர் பூப்பந்தாட்ட பேரவையின் இலங்கைக்கான இணைப்பாளரும் பயிற்றுவிப்பாளருமான அன்ரனி ஜெயகாந்தன் கலந்து கொண்டார் .

இதில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் கலந்து சிறப்பித்தனர்.

இப் பயிற்சி முகாமானது இப்பிரதேசத்திலுள்ள வீர வீராங்கனைகளை ஊக்கப்படுத்தும் செயற்பாடாகவும் திறமைகளை ஊக்கப்படுத்தும் ஒரு பயிற்சி முகாமாகவும் அமைந்திருந்தது.

இப் பயிற்சி முகாமின் போது கனடா நாட்டின் எல்சன் பூப்பந்தாட்டக் கழகமானது வீரர்களுக்கு தேவையான விளையாட்டு உபகரணங்களை வழங்கி உதவியிருந்தார்கள்.

இந்த கழகமானது வடக்கு கிழக்கு வீரர்களுக்கு வருடந்தோறும் அவ்வாறான உதவிகளை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

(அ)



கல்வியமைச்சினதும் ஜனாதிபதி செயலகத்தினதும் அறிவுறுத்தலின் பேரில் நேற்று செவ்வாய்க்கிழமை நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் இடம் பெற்றது. (அ)

# திருகோணமலையில் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்த சிரமதானம்!

திருமலை, மே 17

திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் திருகோணமலை மாவட்ட சுகாதார பணியாகம் மற்றும் பிரதேச சபைகளூடாக நகர் பகுதியில் துப்புரவாக்கும் பணிகள் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி திருகோணமலை நகர சபை, பட்டினமும் சூழலும் பிரதேச சபை எல்லைகளுக்கு உற்பட்ட நகர் பகுதிகளில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், முப்படையினர், பொதுமக்கள் இணைந்து இந்த சிரமதானப் பணியை முன்னெடுத்துள்ளனர்.

குறிப்பாக திருகோணமலை கொழும்பு பிரதான வீதியில் கடற்கரையோரங்களில் காணப்படுகின்ற திண்மக் களிவு அகற்றும் நடவடிக்கையும் வரோதய நகர் பகுதியில் வீதியோரங்களில் காணப்படுகின்ற கழிவுகளை அகற்றும் நடவடிக்கைகளும், தண்ணீர் தேங்கும் பொருட்களையும் அகற்றும் நடவடிக்கைகளும் நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



மேலும் வீடுகளில் டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக வீட்டையும் வீட்டுச்சுற்றுச் சூழல்களையும் பாதுகாப்பான முறையில் நுளம்புகள் பெருகாதவாறு தூய்மைப்படுத்தி டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் முன்வரவேண்டுமென இதன்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# டெங்கு ஒழிப்புத் திட்டத்தில் பாடசாலையில் சிரமதானம்

கொழும்பு, மே. 17

டெங்குக் கட்டுப்பாட்டு தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைவாக கிழக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலின் விசேட டெங்கு ஒழிப்பு தினமாக நேற்று அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து பாடசாலைகள், அலுவலகங்கள் போன்றவற்றில் காணப்படும் அனைத்து குப்பைகள்,கால்வாய்கள், சாக்கடைகள் மற்றும் நுளம்பு வளரக்கூடிய இடங்களைச் சுத்தம் செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்கமைவாக நேற்று காலை 8 மணி முதல் பகல் 12 மணிவரை கல்முனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட அஸ்-ஸூஹரா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் எம். எச். எஸ். ஆர். மஜீதியா தலைமையில்



மாபெரும் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதி அதிபர், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

(அ)

# “பிரிட்டிஷ் பிரதமரின் மாமியார் என்பதை நம்ப மறுக்கிறார்கள்”

## எழுத்தாளர் சுதா மூர்த்திக்கு இப்படி ஒரு சிக்கல்

லண்டன், மே 17

**ஒரு தடவை நான் அங்குபோகும் போது குடிவரவு அதிகாரி ஒருவர் லண்டனில் எனது வதிவிட முகவரியைக் கேட்டார். அப்போது எனது மூத்த சகோதரியும் உடன் இருந்தார். “நம்பர் 10, டவுணிங் வீதி” என்பதையே எழுதவேண்டும் என்று நினைத்தேன். எனது மூத்த மகனும் லண்டனில் தான் வசிக்கிறார். ஆனால் அவரது வதிவிட முகவரி முழுமையாக எனக்குத் தெரியாது. கடைசியில் டவுணிங் வீதி முகவரியையே எழுதினேன். அந்த அதிகாரி வியப்புடன் என்னைப் பார்த்துவிட்டு “என்ன பகிடியா விடுகிறாய்?” என்று கேட்டார்.**



“இல்லை இல்லை உண்மையைத் தான் கூறுகிறேன்” என்று அவரைப் பார்த்துச் சொன்னேன். 72 வயதான இந்த எளிமையான மனிசியை இங்கிலாந்துப் பிரதமரது மாமியார் என யாருமே நம்புகிறார்கள் இல்லை.

-இப்படிக் கூறியிருக்கிறார் எழுத்தாளரும் தொழிலதிபருமான சுதா மூர்த்தி.

சுதா மூர்த்தி இந்தியாவின் பிரபல இன்ஃபோசிஸ் தொழில்நுட்பக் கம்பனியின் நிறுவுநரும் தொழிலதிபருமாகிய என். கே நாராயண் மூர்த்தியின் மனைவி ஆவார். இவர்களது ஒரே புதல்வியான அக்ஷதா மூர்த்தியே இங்கிலாந்தின் முதலாவது இந்திய வம்சாவளிப் பிரதமராகிய ரிஷி சுனாக்கின் துணைவியார்.

சுதா மூர்த்தி இந்தியாவின் பிரபல கோடீஸ்வரர்களில் ஒருவரது மனைவி, இன்ஃபோசிஸ் தொழில்நுட்பக் கம்பனியின் தலைவி என்று பல தகுதிகளைக் கொண்டிருந்த போதிலும் மிகவும் எளிமையான வாழ்க்கையைத் தொடர்பவர் என்று அறியப்பட்டவர். எளிமையான தனது தோற்றம் இங்கிலாந்துப் பிரதமரது மாமியாரா இவர் என்ற சந்தேகத்தை அடிக்கடிப் பலரிடம் எழுப்புகிறது என்று பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொடர் ஒன்றில் அவரே கூறியிருக்கிறார்.

தன்னுடைய அண்மைக்கால இங்கிலாந்துப் பயணங்களின் போது விமான நிலையங்களில் குடிவரவு-குடியகல்வு அதிகாரிகள் தனது தங்குமிடம் இங்கிலாந்துப் பிரதமரது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான நம்பர் 10, டவுணிங் வீதி என்பதை நம்ப மறுத்த சம்பவங்களைக் குறிப்பிட்டு விவரித்திருக்கிறார்.

தொழிலதிபர், கல்வியாளர், எழுத்தாளர் பரோபகாரர் எனப் பல முகங்களில் அறியப்பட்டவரான சுதா மூர்த்தி, இந்தியாவின் உயர்ந்த சிவிலியன் விருதுகளில் ஒன்றாகிய பத்மபூஷன் விருதை அண்மையில் பெற்றிருந்தார்.

(அ)



# சூடான் மோதல்களில் பொதுமக்கள் மரணம்

கார்ட்டூம், மே 17

சூடானின் டார்பூர் பிராந்தியத்தில் இடம்பெற்ற தாக்குதலில் பல பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் குழுக்களும், பொது மக்களும் கூறுகின்றனர்.

அந்த நாட்டு இரண்டு இராணுவ பிரிவுகளுக்கு இடையிலான மோதல், இரண்டு மாதங்களாக நடைபெற்று வருகின்றது.

சூடான் தலைநகரம் முழுவதும் கடுமையான போர்களின் முக்கிய அரங்கமாக உள்ளது.

எனினும் சூடானின் மேற்கு மாகாணத்தின் தலைநகரில் கடந்த மூன்று நாட்களாக மோதல்கள் இடம்பெற்று வருவதாக மனித உரிமைக் குழுக்கள் மற்றும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

அங்குள்ள வழிபாட்டு தளமொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 77 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, கடந்த மூன்று நாட்களில் அங்கு 280 பேர் உயிரிழந்ததாக தரவுகள் தெரிவிக்கின்றன.

(அ)

# ரஷ்ய எல்லைக்குள் அடுத்தடுத்து வீழ்ந்த ஹெலிகள், விமானங்கள்!

மொஸ்கோ, மே 17

ரஷ்யாவில் இரண்டு போர் விமானங்கள், மற்றும் இரண்டு ஹெலிக்கொப்ரர்கள் அடங்கிய நான்கு வான்கலங்கள் சனிக்கிழமை அடுத்தடுத்து வெடித்துச் சிதறி வீழ்ந்திருக்கின்றன. உக்ரைன் அதிபர் ஷெலென்ஸ்கி ஐரோப்பிய நட்பு நாடுகள் சிலவற்றுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த சமயத்திலேயே உக்ரைனை அண்டிய ரஷ்யாவின் எல்லைப் பகுதி நகரம் ஒன்றின் மேல் அடுத்தடுத்து இந்த நான்கு விமானங்களினதும் பேரனர்த்தம் நேர்ந்திருக்கிறது.

உக்ரைனின் வட கிழக்குப் பகுதியோடு எல்லையைக் கொண்டுள்ள ரஷ்யாவின் பிறையன்ஸ்க் பிராந்தியத்தின் வான் பரப்பில் சுக்கோய் சு - 34 குண்டு வீச்சு விமானம், சுக்கோய் சு - 35 சண்டை விமானம் ஆகியனவும் மற்றும் இரண்டு எம்ஐ-8 ஹெலிகளுமே கிட்டத்தட்ட ஒரே சமயத்தில் சுட்டு வீழ்த்தப்பட்டன-என்று ரஷ்யாவின் ‘கொமர்சன்ட்’ பத்திரிகை அதன் இணையத் தளத்தில் செய்தி வெளியிட்டிருக்கிறது.



நான்கு வான்கலங்களும் உக்ரைன் பகுதிக்குள் பிரவேசிக்க இருந்த சமயத்திலேயே ரஷ்ய எல்லைக்குள் ஊடுருவிய சக்திகளால் அங்கு வைத்துத் தாக்கப்பட்டிருக்கின்றன என்று செய்திகளில் கூறப்படுகிறது.

மொஸ்கோ இதனை இன்னமும் உறுதி செய்யவில்லை.

ரஷ்யாவின் இராணுவ மற்றும் பாதுகாப்புக் கட்டுரையாளர்கள் சிலரும் நான்கு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட தகவலை உறுதிப்படுத்தி உள்ளனர். அவற்றின் விமானிகள் நால்வரும் உயிரிழந்தனர் என்றும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

ஹெலிகள் வானில் வெடித்துச் சிதறி எரிவதைக் காட்டும் வீடியோக்கள் சமூக வலைத்தள செய்திச் சேவைகளில் பகிரப்பட்டிருக்கின்றன. ஒரு போர் விமானமும் ஹெலிக்கொப்ரர் ஒன்றும் இயந்திரக் கோளாறு காரணமாக வீழ்ந்து நொறுங்கின என்பதை மட்டும் ரஷ்யாவின் அரசு செய்தி நிறுவனம் உறுதிப்படுத்தி உள்ளது.

இத் தாக்குதல்கள் தொடர்பாக உக்ரைன் அரசுத் தரப்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. பொதுவாக ரஷ்யாவின் எல்லைக்குள் நடத்தப்படுகின்ற இவை போன்ற தாக்குதல்களுக்கு உக்ரைன் உரிமைகோருவதில்லை. ஆனாலும் இந்தச் சம்பவங்களை ஒரு “கரும வினை” என்று உக்ரைன் அதிபரது ஆலோசகர் ஒருவர் வர்ணித்துள்ளார்.

(அ)

### அதிகரிக்கிறது போர் பதற்றம்!

# உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை வழங்க தயாராகும் பிரித்தானியா

லண்டன், மே 17

உக்ரைனுக்கு நூற்றுக்கணக்கான நீண்டதூர ஏவுகணைகள் மற்றும் ஆயுதம் தாங்கிய ஆளில்லா விமானங்களை பிரிட்டன் அனுப்பும் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் அறிவிக்கப்பட்ட உதவிகளுக்கு மேலதிகமாக இந்த புதிய ஆயுத உதவிக்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

போர்க்களத்தை உக்ரைனுக்குச் சாதகமாக மாற்றும் நோக்கில் வேறு நாடுகளை விட பிரித்தானியா அதிக ஆயுதங்களை வழங்கி வருகின்றது.

முன்னதாக, மேற்கத்திய நட்பு நாடுகளின் சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக, உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஷெலென்ஸ்கி பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக்கை சந்தித்தார்.

மேற்குலக நாடுகளும் போர் விமானங்களை அனுப்புவது முக்கியம் என்று உக்ரைன் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கப் பிரஜை ஒருவருக்கு சீன நீதிமன்றம் ஆயுள் தண்டனை

பீஜிங், மே 17

சீன நீதிமன்றம் ஒன்று அமெரிக்க பிரஜை ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

78 வயதான ஜோன் ஷிங்-வன் லியூங் எனும் அமெரிக்கர் ஹொங்கொங்கில் உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என தெரிவித்து இரண்டு வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு குறித்து மூடிய கதவின் பின்னால் இடம்பெற்ற விசாரணைகளின் பின்னர் சீன நீதிமன்றம் விவரங்கள் எதனையும் வெளியிடவில்லை.

சீனாவில் மேற்கொள்ளப்படும் பெரும்பாலான விசாரணைகள் குறித்த விவரங்கள் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுவதில்லை.

இந்தநிலையில் அமெரிக்கருக்கு வழங்கப்பட்ட தண்டனை குறித்து தாம் அறிந்துள்ளதாக பீஜிங்கில் உள்ள அமெரிக்க தூதுவராலயத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ரீதியாக வாழும் அமெரிக்க மக்களின் பாதுகாப்பு குறித்து அமெரிக்க ராஜாங்க திணைக்களம் அதிக கரிசனை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலதிக தகவல்கள் வெளியானதன் பின்னர் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே சீனா மற்றும் அமெரிக்காவிற்கு இடையேயான உறவு முறுகல் நிலையில் உள்ள நிலையில், நேற்று முன்தினம் ஆயுள் தண்டனை வழங்கப்பட்ட அமெரிக்கர் குறித்து பிரச்சனைகள் மேலும் அதிகரிக்கலாம் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த 2018 ஆம் ஆண்டு சீனாவிற்கு எதிராக வர்த்தக எதிர்ப்பு நடவடிக்கையினை மேற்கொண்டதன் பின்னர், இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)



தேசிய கூடைப்பந்தாட்ட போட்டி;

## யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது

கொழும்பு, மே 17

இலங்கை பாடசாலை கூடைப்பந்தாட்ட சங்கத்தால் தேசிய ரீதியாக நடத்தப்பட்ட 16 வயதுக்கு உட்பட்டோருக்கான டிவிசன் சி பிரிவு கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் அணி சம்பியனாகியுள்ளது.


கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சென். பிரிட்ஜெட்ஸ் கொன்வென்ட் அணியை முதல் கால்பாதியில் 4 : 4 ரீதியிலும் இரண்டாவது கால்பாதியில் 8 : 8 ரீதியிலும் மூன்றாவது கால்பாதியில்16 : 10 ரீதியிலும் நான்காவது கால்பாதி முடிவில் 26 : 14 ரீதியிலும் கைப்பற்றி யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இது இலங்கை கூடைப்பந்தாட்ட சங்கத்தால் நடத்தப்பட்ட 16 வயது பிரிவு போட்டியில் வடக்கு மாகாண பாடசாலை ஒன்று பெற்ற முதலாவது சம்பியன் பட்டமாகும்.

போட்டியின் சிறந்த வீராங்கனையாக ஜெபோஷினி கைசிங் ரவீந்திரகுமார் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன், போட்டியின் சிறந்த தற்காப்பு வீராங்கனையாக விஜயரூபன் சகானா தெரிவானார்.

யாழ். திருக்குடும்ப கன்னியர்மட கூடைப்பந்தாட்ட அணிக்கு தனுஷ்காந்த் ராஜசோபனா பயிற்றுவிப்பாளரராக கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)



## லா லிகா உதைபந்தாட்டம் பார்சிலோனா சம்பியன்!

பார்சிலோனா, மே 17

ஸ்பெய்னின் லா லிகா உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் சம்பியன் பட்டத்தை பார்சிலோனா கைப்பற்றுவது உறுதியாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இஸ்பான்யோல் கழகத்துடனான போட்டியில் பார்சிலோனா 4 - 2 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியுடன் 34 போட்டிகளில் மொத்தமாக 85 புள்ளிகளை பெற்ற பார்சிலோனா லா லிகா சம்பியன் பட்டத்தை உறுதி செய்தது. எனினும், அந்தக் கழகத்துக்கு இன்னும் 4 போட்டிகள் மீதமுள்ளன.

லா லிகா பட்டத்தை பார்சிலோனா 27ஆவது தடவையாக வென்றுள்ளது. 2019ஆம் ஆண்டின் பின்னர் அக்கழகம் சம்பியனாவது இதுவே முதல் தடவையாகும்.

பார்சிலோனாவின் பரம வைரியான நடப்புச் சம்பியன் றியல் மட்ரிட் கழகம் இம்முறை 34 போட்டிகளின் முடிவில் 71 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் உள்ளது.

நேற்று முன்தினம் நடந்த போட்டியில் பார்சிலோனா சார்பில் றொபர்ட் லெவான்டோவ்ஸ்கி இரு கோல்களை அடித்தார். அலெஹான்ட்ரோ பால்டே, ஜூல்ஸ் கொண்டே ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

(ஐ)

# ஷுப்மன் கில் அபார சதம் 'பிளே ஓவ்' சுற்றில் குஜராத்!

அகமதாபாத், மே 17

ஷுப்மன் கில்லின் அதிரடியான ஐ. பி. எல். கன்னி சதம் கைகொடுக்க குஜராத் ரைட்டன்ஸ் அணி வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் இரவு அகமதாபாத்தில் நடந்த போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியும் குஜராத் ரைட்டன்ஸ் அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் ரைட்டன்ஸ் அணிக்கு தொடக்கம் கொடுத்த ரித்திமன் சஹா 3ஆவது பந்தில் ஓட்டம் பெறாமல் ஆட்டம் இழந்தார். மற்றோர் ஆரம்ப வீரர் ஷுப்மான் கில் சாய் சுதர்சன் ஆகியோர் இணைந்து 147 ஓட்டங்களை இணைப்பாட்டாக பெற்றனர். இதனால் குஜராத் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 189 ஓட்டங்களை குவித்தது.

ஷுப்மன் கில் 58 பந்துகளை எதிர்கொண்டு 13 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 101 ஓட்டங்களைக் குவித்தார். சாய் சுதர்சன் 47 ஓட்டங்களைப் பெற்றார்.

சாய் சுதர்சனின் விக்கெட் உட்பட 8 விக்கெட்கள் வெறும் 41 ஓட்டங்களுக்கு சரிந்தன. குஜராத்தின் ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் எவரும் இரு வரிசை இலக்கத்தை தொடவில்லை.

ஐபிஎல் போட்டியில் முதல் தடவையாக விளையாடிய இலங்கை அணித் தலைவர் தசூன் ஷானக 9 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் புவனேஷ்வர் குமார் 30 ஓட்டங்களுக்கு 5




விக்கெட்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 189 ஓட்டங்கள் இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் 20 ஓவ்களில் 9 விக்கெட்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

9 ஓவர்கள் நிறைவில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் 7 விக்கெட்களை இழந்து 59 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தடுமாறியது. ஹென்றிச் கிளாசனும் புவனேஷ்வர் குமாரும் 8ஆவது விக்கெட்டில் 68 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை போராட வைத்தனர்.

கிளாசன் 64 ஓட்டங்களையும் புவனேஷ்வர் குமார் 27 ஓட்டங்களையும் மயங்க் மார்கண்டே ஆட்டம் இழக்கமால் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஏனையவர்கள் 10 அல்லது அதற்கு குறைவான ஓட்டங்களையே பெற்றனர்.

பந்துவீச்சில் மொஹமத் ஷமி 21 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் மோஹித் ஷர்மா 28 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

கடந்த முறை சம்பியனான குஜராத் ரைட்டன்ஸ் இந்த ஆண்டும் இறுதிப் போட்டிக்கு முந்தைய (பிளே ஓவ்) சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. டில்லி கப்பிட்டல்ஸ் அணியை தொடர்ந்து சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியும் இறுதி சுற்றுக்கு முந்தைய வாய்ப்பை இழந்துள்ளது.

(ஐ)

# ஐ. பி. எல்லின் அடுத்த தொடரில் டோனி விளையாட மாட்டார்!

சென்னை, மே 17

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் சென்னை அணியின் தலைவரான டோனி இந்த தொடருடன் ஐ. பி. எல். தொடரில் இருந்து ஓய்வுபெறுவார் என்று பரவலாக கூறப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக அவரிடமே கேள்விகள் கேட்கப்பட்டன. ஆனால், தனது ஓய்வு முடிவு குறித்து டோனி இது வரையில் எந்தத் தகவலும் அளிக்கவில்லை. டோனி இந்த தொடருடன் ஓய்வு பெற்றுவிடுவார் என்றும் சில முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கூறி வந்தாலும், சிலரோ அவர் அடுத்த தொடரிலும் விளையாடுவார் என்றும் கூறி வருகின்றனர்.

அடுத்தஐ. பி. எல். தொடரில் டோனி விளையாடமாட்டார் என இந்திய அணியின் முன்னாள் வீரர் முகமது கைப் கூறி உள்ளார். டோனி ஓய்வு பெறுவாரா என்பது தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளித்துள்ள முகமது கைப்,

நடப்பு தொடருடன் ஓய்வு பெறுவதை டோனி பல முறை உணர்த்திவிட்டார். அடுத்த தொடரில் அவர் ஆடமாட்டார் என்றே தனக்கு தோன்றுவதாகவும் கைப் கூறியுள்ளார்.

கவாஸ்கர் டோனியிடம் ஓட்டோகிராப் வாங்கியது டோனியின் சிறப்பை வெளிப்படுத்துவதாகவும் கைப் தெரிவித்துள்ளார். (ஐ)



# மஹர சிறைச்சாலை கைதிகள் 63 பேரை கைது செய்ய உத்தரவு

## வெலிசறை நீதிவான் நேற்று பிறப்பிப்பு

கொழும்பு, மே 17

**மஹர சிறைச்சாலையில் அதிகாரிகளை தாக்கிச் சிறைச்சாலையை சேதப்படுத்திய 63 கைதிகளை உடனடியாக கைதுசெய்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வெலிசறை நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.**

கொரோனா தொற்றுக்குள்ளான கைதிகளுக்கு சிகிச்சை வழங்குமாறு கோரி மஹர சிறைச்சாலை கைதிகள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது அதிகாரிகளை தாக்கிச் சிறைச்சாலையை சேதப்படுத்திய 63 கைதிகளை உடனடியாக கைது செய்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வெலிசறை நீதிவான் துசித தம்மிக்க உடுவவிதான இரகசிய பொலிஸாருக்கு நேற்று உத்தரவிட்டார்.

போராட்டத்தின்போது சிறைக் கட்டடங்களுக்கு தீ வைத்ததன் மூலம் ஒரு கோடியே 74 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான நட்டத்தை கைதிகள் ஏற்படுத்தியதோடு, போராட்டத்தின் போது சிறையில் இருந்த சுமார் 19 இலட்சம் ரூபாய் பெறுமதியான உணவுப் பொருட்களையும் அழித்துள்ளனர்.

இந்த போராட்டத்தின் போது சிறைச்சாலை கட்டடங்களுக்கு தீ வைத்து தாக்கியதன் மூலம் கைதிகள் கட்டடங்களுக்கும் உணவுப் பொருட்களுக்கும் சுமார் 2 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுத்தியதாக அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களம் சமர்ப்பித்த அறிக்கையை நீதிவான் கவனத்தில் கொண்டுள்ளார். (அ)

# மின்சார வாகன இறக்குமதிக்கு அமைச்சரவை விசேட அனுமதி

கொழும்பு, மே 16

வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் திட்டத்தை நீடிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி, உரிமம் வழங்கும் திட்டம் செப்ரெம்பர் 23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பெரும் சலுகை கிடைத்துள்ளதாக அமைச்சரவைத் தீர்மானத்தை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வெளிநாட்டில் பணிபுரிபவர்கள் தமது வருமானத்தை சட்டபூர்வமாக இலங்கைக்கு அனுப்பியிருந்தால் முழுமையாக மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும் என முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன்படி, மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு, 01.05.2022 முதல் 31.12.2022 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு அனுப்பப்பட்ட அந்நியச் செலாவணியின் அளவை அடிப்படையாகக் கொண்டு, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் விரும்பிய மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

# துப்பாக்கிச்சூட்டில் தந்தை உயிரிழப்பு!

கொழும்பு, மே. 17

மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை மற்றும் மகன் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் தந்தை உயிரிழந்துள்ளதுடன் மகன் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மாத்தறையில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

தந்தையும் மகனும் பயணித்த மோட்டார் சைக்கிளின் பின்னால் துரத்திச் சென்ற அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். 52 வயதுடைய கமல் சமிந்த என்பவரே சாவடைந்தார். அவரது சடலம் மாத்தறை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தப்பிச் சென்றுள்ளதால் அவர்களைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 32 இலங்கை பணிப்பெண்கள் குவைத்திலிருந்து திரும்பினர்

கொழும்பு, மே 17

குவைத்துக்கு பணிப் பெண்களாகச் சென்று அந்த நாட்டின் சட்டங்களை மீறி சட்டவிரோதமாக தங்கியிருந்த 32 இலங்கை பெண்கள், நேற்று செவ்வாய்க்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

ஒப்பந்தம் செய்யப்பட்ட பணியிடத்தையோ அல்லது வீட்டையோ விட்டு வெளியேறி வேறு இடங்களில் பணிபுரிந்த நிலையில் சொந்த விருப்பப்படி இலங்கை திரும்புவதற்காக தூதரகத்தில் தம்மைப் பதிவு செய்தவர்களே இவ்வாறு நாடு திரும்பினர்.

இவர்கள் அநுராதபுரம், வவுனியா, கம்பஹா, கிண்ணியா, கொழும்பு, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# டிஜிற்றல் மயமாகும் போக்குவரத்து துறை!

கொழும்பு, மே. 17

பொதுப் பயணிகளுக்கு மேலதிக வசதியுடன் கூடிய போக்குவரத்து சேவையை வழங்குவதற்காக போக்குவரத்து துறை, டிஜிற்றல் மயமாக்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.



இதற்கமைய இலங்கை போக்குவரத்துச் சபையின் பயணச்சீட்டு மற்றும் ரயில் பயணச்சீட்டு என்பன கியூ.ஆர். முறைமையாக மாற்றப்படவுள்ளதாகவும் அதனூடாக வருவாயை அதிகரிக்க முடியும் எனவும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார்.

அத்துடன் முடியுமான அளவு விரைவாக டிஜிற்றல் சாரதி அனுமதி பத்திரத்தை அச்சிட்டு, தவறிழைக்கும் சாரதிகளுக்கு மதிப்பெண் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கும் எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

# மகனை கழுத்தறுத்து கொன்ற தந்தை கைது

கொழும்பு, மே 17

இந்துருவ, அட்டவலவத்த சுனாமிக் கிராமத்தில் தந்தைக்கும் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட சண்டையின்போது தந்தையால் மகன் கொலை செய்யப்பட்டுள்ளதாக கொஸ்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்துருவ, அட்டவலவத்த பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய கசுன் குமார என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

வீட்டில் தந்தைக்கும் மகனுக்கும் இடையே நீண்ட நேரம் வாக்குவாதம் ஏற்பட்டதையடுத்து, தந்தை சமையலறையில் இருந்த கத்தியை எடுத்து மகனின் கழுத்தை அறுத்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து ஆபத்தான நிலையில் இருந்த மகனை பலப்பிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும்போது அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதன்போது 65 வயதுடைய சந்தேக நபரான தந்தை கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# முள்ளிவாய்க்கால் கஞ்சியை பருகிய பொலிஸார் மீது உள்ளக விசாரணை!

கொழும்பு, மே 17

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வீதிப் போக்குவரத்து பொலிஸார் இருவர் முள்ளிவாய்க்கால் கஞ்சி குடித்ததை அடுத்து அவர்கள்மீது உள்ளக விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

யாழ்.பல்கலைகழக மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

இதன்போது ஏ-9 பிரதான வீதியில் பயணிப்பவர்களுக்கு ஏற்பாட்டாளர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தில் வீதியில் பயணித்த கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வீதி போக்குவரத்து பொலிஸாரும் பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கிய முள்ளிவாய்க்கால் கஞ்சியை சிரட்டையில் பெற்று குடித்துள்ளனர்.

இதன் பின்னர் வீதி போக்குவரத்துப் பொலிஸார் முள்ளிவாய்க்கால் கஞ்சி குடிக்கும் புகைப்படங்கள் ஊடகங்களில் வெளிவந்தன. அவை சிங்கள ஊடகங்களிலும் இடம்பிடித்தன.



இதனை தொடர்ந்தே குறித்த இரண்டு பொலிஸார் மீதும் விசாரணையை மேற்கொள்ளுமாறு கொழும்பிலிருந்து தகவல் வழங்கப்பட்டு அவர்கள் மீது உள்ளக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)


# போதகரின் கருத்து குறித்து விசாரணைக்கு பணிப்புரை

கொழும்பு, மே. 17

மத ஒருமைப்பாட்டை சீர்குலைக்கும் வகையில் போதகர் ஜெரோம் பெர்னான்டோ வெளியிட்ட கருத்து தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள ஒரு மத வழிபாட்டுத் தலத்தின் நிறுவுநரும் போதகருமான ஜெரோம் பெர்னான்டோ அண்மையில் நடத்திய ஒரு வழிபாட்டு நிகழ்வின்போது பௌத்த, சைவ மற்றும் இஸ்லாம் மதங்களை அவமதிக்கும் வகையிலான கருத்தை தெரிவித்திருந்தார்.

குறித்த போதகரின் கருத்துக்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து ஜனாதிபதி இவ்வாறு உத்தரவு விடுத்துள்ளார்.



அவரின் கருத்து பிற மதங்களை புண்படுத்தும் வகையிலும் அவமதிக்கும் வகையிலும் இருப்பதாக பலரும் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளனர். (அ)

## அரசியல்..

நீதிபதி நவரத்ன மாரசிங்க விடுதலை செய்தார்.

2006 டிசெம்பர் முதலாம் திகதி கொழும்பு கொள்ளுபிட்டி பித்தளை சந்தியில் அப்போதைய பாதுகாப்பு செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷவை கொல்லும் நோக்கில் விடுதலைப் புலிகள் தற்கொலை தாக்குதலை நடத்தினர். இதில், 3 இராணுவ அதிகாரிகள் உயிரிழந்தனர். அத்துடன், பாதுகாப்பு செயலரான கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பொதுமக்களுக்கு காயங்களை, அரச சொத்துகளுக்கு சேதங்கள் ஏற்படுத்தினார் என்ற ஆரூரனுக்கு எதிராக 2012 டிசெம்பர் 4ஆம் திகதி மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபரால் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இதில், சிவலிங்கம் ஆரூரன் பயங்கரவாதத் தடுப்பு பிரிவு பொலிஸாரின் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருக்கையில் பொலிஸ் அத்தியட்சகருக்கு சுயவிருப்பத்தில் வழங்கியதாக கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அரச தரப்பின் பிரதான சான்றாக முன்வைக்கப்பட்டிருந்து.

வழக்கு விசாரணையில் அரச தரப்பின் பிரதான சான்றான குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாக எதிரியால் வழங்கப்படவில்லை என்ற ஆட்சேபனை எதிரி சார்பில் முன்வைக்கப்பட்டதை அடுத்து உண்மை விளம்பல் விசாரணை நடைபெற்றது.

கைதியான சிவலிங்கம் ஆருரனை பொலிஸார் சித்திரவதை செய்து கடும் காயங்களை ஏற்படுத்தி குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை பெற்றனர் என்பது சாட்சியங்கள் மூலம் எதிரி தரப்பில் நீருப்பிக்கப்பட்டதாக ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா தனது வாதத்தில் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

அரசதரப்பின் முக்கிய சான்றான முன்வைக்கப்பட்ட குற்றஒப்புதல் வாக்கு மூலத்தை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நிராகரிப்பதாக கட்டளை வழங்கினார்.

குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை நிராகரிப்பதாக நீதிமன்றம் கட்டளை வழங்கியதையடுத்து எதிரிதரப்பில் முற்பட்ட சட்டத்தரணி கே. வி. தவராசா இந்த அரசியல் கைதி 15 வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமையை நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வந்ததுடன், வழக்கை தொடர்ந்து நடத்த வேறு சாட்சியங்கள் இல்லையென்றால் அவரை விடுதலை செய்யும்படி தனது சமர்ப்பணத்தில் கேட்டுக்கொண்டார்.

சட்டமாஅதிபர் சார்பில் ஆஜராகிய பிரதிசொலிசிடர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி ரோகாந்த அபேசூரிய வேறு சாட்சியங்கள் இல்லையென நீதிமன்றத்துக்கு அறிவித்தார். இதையடுத்து நீதிபதி நவரத்ன மாரசிங்க, சிவலிங்கம் ஆருரனை விடுதலை செய்தார்.

## சிறுமியை...

ஒருவர் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார் என குறிப்பிட்டு, அவரை பிடித்து சிலர் விசாரித்துள்ளனர். அவர் இயல்பாக பதில் சொல் லாததால், அவர் கடத்தல் காரனாக இருக்க வேண்டும் நம்பிய அவர்கள் அவரை கடுமையாகதாக்கியுள்ளனர்.

பின்னர் அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இதன்போது அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் அவர் காணாமல்போனமை தொடர்பாக ஏற்கனவே குடும்பத்தினரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஒருவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதை கூட கண்டறிய முடியாமல் கும்பலாக சேர்ந்து தாக்கிய கொடூர சம்பவம் பலத்த விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், அந்த கும்பல் மீது சட்ட நடவடிக்கையெடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்டவரின் உறவினர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ஐ-03)

## இலங்கையில்...

யுறுத்தியிருந்தனர் என்றும் அமெரிக்க இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

மத சிறுபான்மை குழுக்களை சேர்ந்தவர்களை துன்புறுத்தல், அவர்களுக்கு எதிரான பாரபட்சம் குறித்த கரிசனைகளை தெரிவிப்பதற்காக இலங்கைக்கு அமெரிக்க அதிகாரிகள் பயணம் மேற்கொண்டு இலங்கை அதி காரிகளை சந்தித்தனர் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

மேலும், இந்த சந்திப்புகளின்போது, நீண்டகாலம் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை பின்பற்றவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## முள்ளிவாய்க்கால் படு...

முன்னிட்டு நேற்று, அவரின் பணிமனையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வை அடுத்து அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த அஞ்சலி நிகழ்வில் வல்வெட்டித்துறை நகரசபை முன்னாள் உறுப்பினர் சதீஸ் மற்றும் சமூக அரசியல் செயல்பாட்டாளர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இங்கு மேலும் உரையாற்றிய எம்.கே. சிவாஜிலிங்கம்-

இலங்கையின் அரச படைகளாலும் சிங்கள காடையர் குழுக்களாலும் தமிழ் இனப்படுகொலை செய்யப்பட்ட ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் பொதுமக்களுக்கு எமது அஞ்சலிகள்.

தமிழ் மக்கள்மீதான இனப்படுகொலை, போர்க் குற்றங்களுக்கான குற்றவாளிகளைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி எமது மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்வோம்.

படுகொலைகள் மீள நிகழாமையை உறுதிப்படுத்தவும் நீதி கிடைக்கவும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் அரசியல் தீர்வைக் காண சுதந்திரத்துக்கான பொது சன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தவேண்டும்.

இலங்கையின் வடக்கு-கிழக்கு பிராந்தியத்தில் வசிக்கும் மக்களும் 1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது முதல் வாழ்ந்துவரும் புலம் பெயர் மக்கள் உடபட அனைவரும் கலந்துகொள்ளும் வகையில் வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்-என்றார். (அ)

## வடக்கு உட்பட...

லக்ஷ்மன் யாப்பா ஆகியோர் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொள்வர்.

வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களின் ஆளுநர்கள் ஜனாதிபதியால் அப்பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட நிலையிலேயே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு ஆளுநராக சார்ள்ஸ் முன்னரும் பதவி வகித்திருந்தார். அப்போது அவரின் நிர்வாக முறை கடுமையான விமர்சனத்தை சந்தித்திருந்தது. பின்னர் அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இதனை அடுத்து அவர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டிருந்தார். உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அவர் அந்தப் பதவியில் இருந்தும் விலகியிருந்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதற்கு அவரின் நடவடிக்கையும் துணையாக இருந்தது என விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இந்நிலையில் இப்போது அவர் மீண்டும் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், கிழக்கு மாகாண ஆளுநராக பதவி வகித்த சிங்கள கடும் போக்காளர் என விமர்சிக்கப்பட்ட அநுராதா ஜஹம்பத் அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு அவரது இடத்துக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரான செந்தில் தொண்டமான் நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## இலங்கை...

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய எரிபொருள் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான நிழல் அமைச்சர் பரிகார்டினர் இலங்கையில் நிலைமை இன்னமும் மாற்றமடையவில்லை.

இன்னும் மனித உரிமைகள் பேரவையின் எத்தனை அறிக்கைககள் தேவை எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

வடக்கில் இராணுவப் பிரசன்னத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என கேள்வி எழுப்பியுள்ள ஹரி பார்டினர் இலங்கை தனது திறமையையும் ஆளுவதற்கான உரிமையையும் இழந்துவிட்டது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தொழில் கட்சியால் இலங்கை மீது கொடுக்கப்படவேண்டிய அழுத்தங்களை கொடுக்கமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். நான் உங்கள் போராட்டத்துக்கு எப்போதும் ஆதரவளிப்பது குறித்து பெருமிதம் அடைகின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்தத்துக்கு மேலாகின்ற போதிலும் எவரும் பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்தாதது குறித்து ஆசிய பசுபிக்கின் நிழல் அமைச்சர் கதரின் வெஸ்ட் தெரிவித்துள்ளார்.

தொழில்கட்சி வலுவான ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை தீர்மானத்தை கொண்டுவரும் என தெரிவித்துள்ள கதரின் வெஸ்ட் இலங்கை அரசாங்கத்தின் போர் குற்றங்கள் குறித்து சுயாதீன சர்வதேச விசாரணையை கொண்டுவரும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக ஒரு தடையை கூட பிரிட்டன் விதிக்காதமை குறித்து கண்டனம் வெளியிட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சியோபைன் மெக்டொனாக், இது அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு முரணானது அமெரிக்கா இதுவரை இலங்கையின் பல அதிகாரிகளுக்கு எதிராக தடைகளை விதித்துள்ளது - என்றார்.

எந்த கட்சி ஆட்சியிலிருந்தாலும் இலங்கையில் பொறுப்புக்கூறல், நீதிக்காக தமிழர்களிற்கான அனைத்து கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு தொடர்ந்தும் குரல் கொடுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

## முள்ளிவாய்க்கால் நினை..

தமிழர் தேசத்துக்கும் தமிழ் மக்களுக்கும் திரும்பப் பெறும் உரித்து இலங்கையின் பூர்வீகக் குடிமக்களுக்கு - ஆண்ட பரம்பரைக்குக் கிடைக்காத நிலையில் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் தேச மக்கள் விடுதலைக்காக ஜனநாயக வழியிலும் ஆயுத வழியிலும் போராட்டங்களை நடத்தி வந்தனர்.

கடந்த 70 ஆண்டுகளிலும் பௌத்த - சிங்களஆட்சியின் மேலாதிக்கம் தமிழர் தேசத்தையும் தமிழ் மக்களையும் பௌத்த - சிங்கள மயமாக்கி வருவதும் தமிழர் தேசமும் தமிழ் மக்களும் இன அழிவுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதையும் உலகம் நன்குஅறிந்துள்ளது.

இன்றுவரை பௌத்த - சிங்கள மயமாக்கப்பட்ட தேசத்தில் தமிழர் போரினாலும் படையெடுப்புளாலும் இனக் கலவரங்களாலும் குறிப்பாக, 2009 காலப்பகுதியில் மே-18 வரை அழிக்கப்பட்டுவரும் நிலையில் எஞ்சிய தமிழ் மக்கள் தங்கள் உயிர்களையும் எஞ்சியதமிழர் தேசத்தையும் பாதுகாக்கவும் இழந்த சுதந்திரத்தைமீட்கவும் போராடிக்கொண்டு இருக்கிறார்கள்.

மே 18 நினைவேந்தல் நிகழ்ச்சி முள்ளிவாய்க்கால் முற்றத்திலும் உலகில் தமிழர் வாழும் பிரதேசங்களிலும் நடைபெற்றும் வந்துள்ள நிலையில் இலங்கையிலும் நடைபெற மக்கள் அணிதிரளவுள்ளனர்.

தமிழர் பாரம்பரியத்தில் உயிர் நீர்த்தவர்களுக்கு அஞ்சலி செய்வது நினைவுகூர்வது அவர் தம் பண்பாடாகும். உயர் நாகரிகமாகும் கடந்த பதினான்கு ஆண்டுகளாக இலங்கையில் முள்ளிவாய்க்கால் முற்றத்திலும் தமிழர் வாழ்விடங்களிலும் இந்த நிகழ்வேந்தல் நிகழ்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன.

தமிழர் பாரம்பரியத்தில் உயிர்களை பலிகொடுத்த, களப் பலியாகிய மக்கள் ஆத்மாக்கள் நினைவுகூரப்படுவதும் அந்த மக்களிடத்திலே வாழ்நாளில் இறப்பில்லாது வாழ்ந்து வருவதும் இதயங்களில் நிலைகொண்டுள்ள நம்பிக்கையாகும். அந்த ஆத்மாக்கள் வாழும் மக்களிடத்தில் அந்தரித்து நிற்கும் எனும் நம்பிக்கையுடன் தமிழர் கொள்கை இலட்சியத்தை நிலை நாட்டி நிற்கும் என்ற திடசங்கற்பம் தமிழர் தேசமக்களிடம் நிலைகொண்டுள்ளது.

அந்தமக்கள் அனைவரும் மே-18 முள்ளிவாய்க்காலிலும் தாம் வாழும் இடங்களிலும் அணிதிரண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நிறைவு செய்து தமிழர் தேச விடுதலையை அடைவோம் எனும் திடசங்கற்பத்தை நிலைநாட்டிக் கொள்வோம் எனவேண்டுகோள் விடுக்கின்றோம் -என்றுள்ளது. (ஐ)

## பண்ணை..

அமைப்புகள் நீதிமன்றை வழக்காடினர். கடந்த ஏப்ரல் 18ஆம் திகதி நடந்த வழக்கில் இந்து அமைப்புக்கள் சார்பில் சட்டத்தரணி என். சிறீகாந்தா, அகில இலங்கை இந்து மாமன்றம், நல்லூர் ஆதீனம் சார்பில் சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் உட்பட பல சட்டத்தரணிகள் இது தொடர்பான வழக்கில் முற்பட்டு வாதடியிருந்தனர். இந்த வழக்கின் தீர்ப்பே நேற்று வழங்கப்பட்டது. (ஐ-03)

## வாகனங்களில்...

விட்டு இரு மாணவிகள் நடந்து வீடு திரும்பிக் கொண் டிருந்தபோது கூலர் ரக வாகனம் ஒன்றும், ஹைஏஸ் வாகனம் ஒன்றும் அவர்களை பின்தொடர்ந்துள்ளது.

அதில், வந்தவர்கள் மாணவிகளை வாகனத் தில் ஏறுமாறும் தாம் அவர்களை வீட்டில் கொண்டு சென்று விடுவதாகவும் கூறியுள்ளனர். அவர்களின் நடவடிக்கைகள் மாணவியருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தவே அங்கிருந்து ஓடி அருகிலிருந்த வீட்டுக்குள் மாணவிகள் நுழைந்துள்ளனர்.

இரு வாகனங்களில் வந்தவர்கள் தம்மை கடத்த முற்பட்டனர் என்று கூறி வீட்டிலிருந்தவர்களிடம் உதவி கோரினர். அந்தக் கிராமத்தவர்களும் வாகனங்களின் நடமாட்டத்தை அவதானித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் ஒட்டுசுட்டான் பொலிஸாருக்கு முறைப்பாடளித்தனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நினைவேந்தல்..

நிலையம் முள்ளிவாய்க் கால் நினைவேந்தலையும் முள்ளிவாய்க் கால் கஞ்சி வழங்கலையும் நேற்று மேற்கொண்டது.

இந்தப் பணியில் ஈடுபட்டிருந்த பத்மநாதன் சிரோஜன் (வயது 29) என் பவரை சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸாரும் புலனாய்வு துறையினரும் கைது செய்து விசாரணைக்காக ஆயித்தியமலை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து செல்லப்பட்டிருந்தார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu

# கண்ணிவெடியகற்றும் இளம்பெண் பணியாளரை காட்டுக்குள் இழுத்துச் சென்று வல்லுறவு முயற்சி!

## முல்லைத்தீவு பொலிஸார் தீவிர விசாரணை

முல்லைத்தீவு, மே 17

**கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த 32 வயதான குடும்பப் பெண்ணைக் காட்டுக்குள் இழுத்துச் சென்று பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்க முயன்ற இருவர் தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றன.**

**எனினும், அவர்கள் இருவரின் கையை கடித்துவிட்டு, அந்த பெண் தப்பியோடியுள்ளார்.**

பாலியல் வன்புணர்வுக்கு முயற்சித்த இருவரும் பூட்ஸ் அணிந்திருந்துள்ளனர்.

கொக்கிளாய்- திருகோணமலை வீதியில் மணலாற்றுக்கு அருகில் உள்ள இராணுவக் காவலரணுக்கு அண்மையாக, நேற்றுமுன்தினம் காலை இந்த சம்பவம் நடந்துள்ளது.

இந்த வீதியில் தற்போது கண்ணிவெடி அகற்றும் பணி நடந்து வருகிறது.

அந்த பகுதியில் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த 32 வயதான குடும்பப் பெண்ணை, முகத்தை மூடிக்கட்டியபடி, பூட்ஸுடன் வந்த இருவர் வலுக்கட்டாயமாக அருகிலுள்ள காட்டுக்குள் இழுத்துச் சென்றுள்ளனர்.

சுமார் 50 மீற்றர் வரை இழுத்துச் சென்று, இளம் பெண்ணின் ஆடைகளைக் களைந்து, வன்புணர்வுக்குள்ளாக்க முயன்றுள்ளனர்.

இதன்போது,இருவரின் கைகளையும் கடித்துவிட்டு அந்தப் பெண் தப்பியோடி வந்துள்ளார். காட்டுக்குள்ளிருந்து வெளியேறி, வீதியின் கரைக்கு வந்து, வோக்கி ரோக்கியில் ஏனைய பணியாளர்களுக்கு தகவல் வழங்கினார்.

இதையடுத்து அவரை மீட்டு, முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதித்தனர். அவர் வைத்திய பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போது, வன்புணர்வுக்குள்ளாக்கப்படவில்லையென்பது தெரிய வந்தது. (அ)

# நிலநடுக்கம் பதிவு

கொழும்பு, மே. 17

கதிர்காமத்தை அண்மித்த பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டுள்ளதாக புவி சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய ரிச்டர் அளவுகோலில் 2.1 மக்னிரியூட்டாக நில நடுக்கம் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நில அதிர்வினால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# மருந்துப் பொருட்களின் விலை குறைவடைகிறது



கொழும்பு, மே 17

மருந்துப் பொருட்களின் விலை விரைவில் குறைக் கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக் வெல தெரிவித்தார்.

மருந்துகளின் விலை தற்போது அதிகரித்து காணப்படுகின்றது என்பதனை மறுக்க முடியாது என அமைச் சர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் தற்போது காணப்படுகின்ற விலையில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என சுகாதார அமைச்சர் கூறினார். (அ)

# மின் கட்டணத் திருத்தம் முன்மொழிவு சமர்ப்பிப்பு

கொழும்பு, மே 17

ஜூலை முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படவுள்ள மின் கட்டண திருத்தம் தொடர்பான முன்மொழிவை மின்சார சபை நேற்றுமுன்தினம் பிற்பகல் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் கையளித்துள்ளது.

அதன்படி மின்சார கட்டணத்தை 3 வீதத்தால் குறைக்க முன்மொழியப்பட்டுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மின்சார உற்பத்தித் தரவுகள் மற்றும் விற்பனைத் தரவுகள், எரிபொருள், நிலக்கரி மற்றும் இதர மூலப் பொருட்களின் விலைகள் மற்றும் இந்த ஆண்டுக்கான மின்சார உற்பத்தித் திட்டம் மற்றும் தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பிரேரணை தயாரிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அதன்படி ஜனவரி முதலாம் திகதி மற்றும் ஜூலை முதலாம் திகதிகளில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்டணத்தை மாற்றியமைப்பதற்கான முன்மொழிவை சமர்ப்பித்துள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை டீசல், பெற்றோல், நிலக்கரி போன்றவற்றின் விலைகளும் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், மின்சாரத் தேவையும் சுமார் 18 வீதத்தால் குறைந்துள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆகவே தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு மின்சார கட்டணத்தை சுமார் 20 வீதத்தால் குறைக்க முடியும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தார். (அ)

# நயினாதீவில் குளவி கொட்டி இளம் குடும்பப்பெண் மரணம்!

யாழ்ப்பாணம், மே 17

வீட்டின் பின்புறத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது குளவி கொட்டியதில், இளம் தாயொருவர் உயிரிழந்துள்ளார்.

நயினாதீவு 8ஆம் வட்டாரத்தை சேர்ந்த மௌலி சபானா (வயது-28) என்ற இளம் தாயே இவ்வாறு நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

வீட்டின் பின்பகுதியை துப்புரவு செய்து கொண்டிருந்தபோது, குளவிக் கொட்டுக்கு இலக்காகி நயினாதீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் அவர் உயிரிழந்தார். அவருக்கு 2 பிள்ளைகள் உள்ளனர். (அ)

# பாராளுமன்றச் செயலாளராக குஷானி ரோஹணதீர நியமனம்!

கொழும்பு, மே 17

பாராளுமன்றச் செயலாளர் நாயகமாக குஷானி ரோஹணதீரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தின் தற்போதைய பணிக்குழாம் பிரதானியாகவும், பிரதிச் செயலாளர் நாயகமாகவும் அவர் பதவி வகித்து வருகிறார்.

இந்த நிலையில், எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில், குஷானி ரோஹணதீர பாராளுமன்ற செயலாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசியலமைப்பு சபை இதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# ஊர்திப் பவனி, கஞ்சி விளக்கேற்றல் எதற்கு?

## கேள்வி எழுப்புகிறார் சரத் வீரசேகர



கொழும்பு, மே 17

“போரில் இறந்த உறவுகளை வீட்டுக்குள் நினைவு கூரலாம். ஊர்திப்பவனி, கஞ்சி வழங்கல், விளக்கேற்றல் எதுவும் தேவையில்லை. அத்துடன் வடக்கு-கிழக்கில் உறவுகள் என்ற போர்வையில் புலிப் பயங்கரவாதிகளை ஆண்டுதோறும் ஒரு தரப்பினர் பகிரங்கமாக நினைவேந்தி வருகின்றனர். இதை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும்” - என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கடற்படை அதிகாரியுமான ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் வடக்கு - கிழக்கில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலையில் அது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கே மேற்கண்டவாறு அவர் பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு நினைவேந்தல்களுக்கு அனுமதி வழங்குவதால் புலிப் பயங்கரவாதிகளையும் தமிழ்த் தரப்பினர் நினைவேந்தி வருகின்றனர். அத்தகைய நிகழ்வுகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

போரில் இறந்த உறவுகளைத் தமிழ் மக்கள் நினைவேந்த வேண்டுமெனில் அவர்கள் தங்களது வீடுகளுக்குள் அதனைச் செய்ய முடியும். அதைவிடுத்து ஊர்திப் பேரணிகள் மூலமும் கஞ்சிகள் வழங்கியும் பொது இடங்களில் விளக்கேற்றியும் வழிபடவேண்டிய அவசியமில்லை.

எதிர்காலத்தில் இப்படியான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக அரசு கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார். (அ)

# பல குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய நபர் கைது!

மட்டக்களப்பு, மே 17

நாடு முழுவதிலுமுள்ள 8 இற்கும் மேற்பட்ட பொலிஸ் பிரிவுகளில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டு தேடப்பட்டு வந்த சந்தேகநபர் 2,600 மில்லி கிராம் ஹெரொயின் போதைப் பொருளுடன் காத்தான்குடியில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை கைது செய் யப்பட்டார்.

காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம்.எஸ்.ஏ. றஹீம் இதனைத் தெரிவித்தார்.

காத்தான்குடியைச் சேர்ந்த 35 வயதுடைய இந்நபர் அம்பாறை இறக்காமத்தில் திருமணம் செய்துள்ளார்.

அக்கரைப்பற்று, மட்டக்க ளப்பு, தெல்தெனிய, புல்மோட்டை, கந்தளாய், சம்மாந்துறை உட் பட 8 பொலிஸ் நிலையங்களுடாக பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வந்தவராவார்.

கைது செய்யப்பட்ட நபர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன் றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# எதிரணியில் அமரமாட்டேன்!

## ஜோன்ஸ்டன் கூறுகிறார்

கொழும்பு, மே 17

“இது எமது ஆட்சி. நாம்தான் ஜனாதிபதியை நியமித்துள்ளோம். எனவே, எதிரணியில் அமர வேண்டிய எந்தவொரு தேவைப்பாடும் கிடையாது.” -என்று பொதுஜன பெரமுன கட்சியின் குருணாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட பொதுஜன பெரமுன எம்.பிக்கள் சிலர் எதிரணியில் அமரவுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"நாம் எதிரணியில் அமர்வதற்கு முற்படவில்லை. இது தொடர்பில் வெளியாகும் தகவல் வதந்தியாகும். எம்மை இலக்கு வைத்து திட்டமிட்ட அடிப்படையில் உருவாக்கப்படும் செய்தியாகும்.

நாம் ஜனாதிபதியொருவரை நியமித்துள்ளோம். அரசின் செயற்பாடுகள் சிறப்பாக இடம்பெறுகின்றன. எமக்கு அமைச்சு பதவி முக்கியம் அல்ல. நாட்டின் முன்னேற்றமே முக்கியம்." எனவும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குறிப்பிட்டார். (அ)

# ரூபாயின் பெறுமதி உயர்வு

கொழும்பு, மே 17

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி மேலும் அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின்படி, டொலரின் கொள்வில்லை 305.43 ஆகவும் விற்பனை விலை 318.79 ஆகவும் பதிவாகியுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி டொலரின் பெறுமதி 362.66 ரூபாயாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.